
மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 13வது

# முன்னோடிப் பரீட்சை 2022

# 10(I) - இணைந்தகணிதம் I

## விடைகள் (புள்ளியிடும் திட்டம்)





Prepared By

P.Senthilnathan *B.Sc, Dip in Ed*

1) **கணிதத்தொகுத்தறிவுக்கோட்பாட்டைப்** பயன்படுத்தி எல்லா $n \in \mathbb{Z}^+$ இற்கும் $\sum_{r=1}^{n}(3r-1)=\frac{n(3n+1)}{2}$ என நிறுவுக.

$$\sum_{r=1}^{n}(3r-1)=\frac{n(3n+1)}{2}$$

$n=1$ எனின் $L:H:S=\sum_{r=1}^{1}(3r-1)=3\times1-1=2, R:H:S=1\times\frac{4}{2}=2$

$L:H:S=R:H:S$ 05

$\therefore\ n=1$ இற்கு முடிவு உண்மை

யாதும் நேர்நிறை எண் $n=p$ இற்கு முடிவு உண்மை என்க

அதாவது $\sum_{r=1}^{p}(3r-1)=\frac{p(3p+1)}{2}$ 05

$n=p+1$ எனில் $\sum_{r=1}^{p+1}(3r-1)=\sum_{r=1}^{p}(3r-1)+3(p+1)$ 05

$=\frac{p(3p+1)}{2}+(3p+2);\ from(1)$

$=\frac{3p^2+7p+4}{2}$

$\sum_{r=1}^{p+1}(3r-1)=\frac{(p+1)^2(3p+4)}{2}=\frac{(p+1)\left(3\overline{p+1}+1\right)}{2}$ 05

$\therefore\ n=p+1$ இற்கும் முடிவு உண்மை.

$\therefore\ n$ இன் எல்லா நேர்நிறை எண்களிற்கும் இம்முடிவு கணிதத்தொகுத்தறிவு முறையில் உண்மையாகும். 05

2) ஒரே வரிப்படத்தில் $y=|x-2|, y=4-|x-2|$ ஆகியவற்றின் வரைபுகளை பரும்படியாகவரைக. **இதிலிருந்து அல்லது வேறுவிதமாக,** சமனிலி $|x+2|<2$ ஐத் திருப்தியாக்கும் $\chi$ இன் எல்லா மெய்பெறுமானங்களின் வீச்சைக் காண்க.


$y=|x-2|, y=4-|x-2|$

ஒரு வெட்டுப்புள்ளியின் $x-$ ஆள்கூறு $x$=0

மற்றைய வெட்டுப்புள்ளியின்

$x-$ ஆள்கூறு $x>2$ இற்கு

$x-2=4-(x-2) \Rightarrow x=4$ 05




தரப்பட்ட சமனிலி $|x+2|<1$

$\Rightarrow |-t+2|<2; x=-t$ என்க.

$\Rightarrow |t-2|<2$ 05

$\Rightarrow 2|t-2|<4-|t-2|$

$\Rightarrow 0<t<4;\ fromGraph$

$\Rightarrow 0<-x<4$

$\Rightarrow -4<x<0$ 05

3) $Z_1, Z_2$ ஆகிய சிக்கல் எண்கள் $Z_1 = 1+i, |Z_2| = 2\sqrt{2}$ ஆகுமாறுள்ளன. $Z = 4Z_1 + Z_2$ ஆல் வரையறுக்கப்படும் சிக்கல் எண் $Z$ இன் ஒழுக்கை கண்டு, அதை ஆகண் வரிப்படத்தில் பரும்படியாக வரைக. இதிலிருந்து $ArgZ$ இன் இழிவுப் பெறுமானத்தைக் காண்க.

$Z_1 = 1+i, |Z_2| = 2\sqrt{2}, Z = x+iy$ என்க $\Rightarrow p(x, y)$

$Z = 4Z_1 + Z_2$

$\Rightarrow Z_2 = Z - 4Z_1$

$= (x+iy) - 4(1+i)$


$Z_2 = (x-4) + i(y-4)$ 05

$\Rightarrow |Z_2| = \sqrt{(x-4)^2 + (y-4)^2}$

$\Rightarrow 2\sqrt{2} = \sqrt{(x-4)^2 + (y-4)^2}$

$\Rightarrow (x-4)^2 + (y-4)^2 = (2\sqrt{2})^2$ 05

மையம் $(4,4)$ ஆரை= $2\sqrt{2}$




$\Delta OCP_0$ இல்

$\sin\alpha = \dfrac{2\sqrt{2}}{4\sqrt{2}} = \dfrac{1}{2}$

$\Rightarrow \alpha = \dfrac{\pi}{6}$ 05

புள்ளி $P_0$ இல் Z இருக்கும் போதே ArgZ இழிவாகும்.

$(ArgZ)_{min} = \dfrac{\pi}{4} - \alpha$

$= \dfrac{\pi}{4} - \dfrac{\pi}{6}$ 05

$= \dfrac{\pi}{12}$

4) $a \in \mathbb{R}$ ஆயிருக்க $\left(x^3 + \dfrac{a}{x}\right)^4, \left(2x^4 - \dfrac{1}{x}\right)^5$ என்பற்றின் ஈருறுப்பு விரியில் உள்ள $x$ ஐ சாராத உறுப்புகளின் விகிதம் முறையே 16:5 ஆக இருப்பின் $a = 2$ எனக்காட்டுக.

$\left(x^3 + \dfrac{a}{x}\right)^4 \Rightarrow T_{r+1} = {}^4C_r (x^3)^{4-r}\left(\dfrac{a}{x}\right)^r = \left({}^4C_r a^r\right) x^{12-4r}$ 05

$12 - 4r = 0 \Rightarrow 3 = r \Rightarrow T_4 = {}^4C_3 a^3 = 4a^3$ 05

$\left(2x^4 - \dfrac{1}{x}\right)^5 \Rightarrow T_{r+1} = {}^5C_r (2x^4)^{5-r}\left(-\dfrac{1}{x}\right)^r = {}^5C_r 2^{5-r}(-1)^r x^{20-5r}$ 05

$20 - 5r = 0 \Rightarrow r = 4 \Rightarrow T_5 = {}^5C_4 2^1 \times 1 = 10$ 05

$\therefore \dfrac{4a^3}{10} = \dfrac{16}{5} \Rightarrow a^3 = 2^3 \Rightarrow a = 2$ 05

5) $\lim_{x\to\frac{\pi}{4}} \frac{(\cot x-\tan x)(\sin x-\cos x)}{(1-\tan^3 x)\left(x-\frac{\pi}{4}\right)} = \frac{2\sqrt{2}}{3}$ எனக் காட்டுக.

$$\lim_{x\to\frac{\pi}{4}} \frac{(\cot x-\tan x)(\sin x-\cos x)}{(1-\tan^3 x)\left(x-\frac{\pi}{4}\right)}$$

$$= \lim_{x\to\frac{\pi}{4}} \frac{\left(\frac{1}{\tan x}-\tan x\right)}{(1-\tan^3 x)} \frac{\sqrt{2}\left(\frac{1}{\sqrt{2}}\sin x-\frac{1}{\sqrt{2}}\cos x\right)}{\left(x-\frac{\pi}{4}\right)}$$ 05

$$= \sqrt{2}\lim_{x\to\frac{\pi}{4}} \frac{(1-\tan^2 x)}{\tan x(1-\tan^3 x)} \frac{\left(\sin x\cos\frac{\pi}{4}-\cos x\sin\frac{\pi}{4}\right)}{\left(x-\frac{\pi}{4}\right)}$$

$$= \sqrt{2}\lim_{x\to\frac{\pi}{4}} \frac{(1-\tan x)(1+\tan x)\sin(x-\frac{\pi}{4})}{\tan x(1-\tan x)(1+\tan x+\tan^2 x)(x-\frac{\pi}{4})}$$ 05

$$= \sqrt{2}\lim_{x\to\frac{\pi}{4}} \left[\frac{(1+\tan x)}{\tan(1+\tan x+\tan^2 x)}\right] \times \lim_{x\to\frac{\pi}{4}} \frac{\sin\left(x-\frac{\pi}{4}\right)}{\left(x-\frac{\pi}{4}\right)}$$ 05

05

$$= \sqrt{2}\times\frac{2}{1\times 3}\times 1$$ 05


$$= \frac{2\sqrt{2}}{3}$$

6) $y=\frac{x}{\sqrt{1+x^2}}, y=0, x=\sqrt{3}$ ஆகிய வளையிகளினால் உள்ளடைக்கப்படும் பிரதேசம் S இன் பரப்பளவு 1 சதுர அலகுகள் எனக் காட்டுக. பிரதேசம் S ஆனது $x$- அச்சுப்பற்றி $2\pi$ ஆரையன்களினூடு சுற்றப் பெறப்படும் திண்மத்தின் கனவளவை $\sqrt{3}\pi-\frac{\pi^2}{3}$ எனக்காட்டுக.

பரப்பு $S=\int_0^{\sqrt{3}} \frac{x}{\sqrt{1+x^2}}dx$ 05

$$=\frac{1}{2}\int_0^{\sqrt{3}} (1+x^2)^{-\frac{1}{2}}.(2x)dx$$

$$=\frac{1}{2}\frac{(1+x^2)^{\frac{1}{2}}}{\frac{1}{2}}\Big|_0^{\sqrt{3}} = 2-1=1$$ 05



கனவளவு $= \int_0^{\sqrt{3}} \pi\left(\frac{x}{\sqrt{1+x^2}}\right)^2 dx$ 05

$= \pi \int_0^{\sqrt{3}} \frac{x^2}{1+x^2} dx$

$= \pi \int_0^{\sqrt{3}} \frac{(1+x^2)-1}{1+x^2} dx$

$= \pi \left\{ \int_0^{\sqrt{3}} 1 dx - \int_0^{\sqrt{3}} \frac{1}{1+x^2} dx \right\}$

$= \pi \left\{ [x]_0^{\sqrt{3}} - [\tan^{-1} x]_0^{\sqrt{3}} \right\}$ 05

$= \pi \left\{ (\sqrt{3}-0) - (\frac{\pi}{3} - 0) \right\}$

$= \frac{\pi\left(3\sqrt{3}-\pi\right)}{3}$ 05

7) நீள்வளையம் ஒன்றின் பரமானச்சமன்பாடு $x = 2\cos\theta, y = \sqrt{3}\sin\theta$ என்பதால் தரப்படுகிறது. இங்கு $\theta$ மெய்ப்பரமானம் $\theta = \frac{\pi}{3}$ இல் தொடலியின் சமன்பாடு $x + 2y - 4 = 0$ எனக்காட்டுக. $\theta = \frac{\pi}{3}$ இல் செவ்வனின் சமன்பாட்டைக்கண்டு, அச்செவ்வனானது நீள்வளையத்தை சந்திக்கும் வேறொரு புள்ளியின் பரமானப்பெறுமானம் $\alpha$ ஆனது $8\cos\alpha - 2\sqrt{3}\sin\alpha = 1$ ஐ திருப்தி செய்யும் எனக்காட்டுக.

$x = 2\cos \Rightarrow \frac{dx}{d\theta} = -2\sin\theta$

$y = \sqrt{3}\sin\theta \Rightarrow \frac{dx}{d\theta} = \sqrt{3}\cos\theta$

$\frac{dy}{dx} = \frac{dy}{d\theta} \cdot \frac{d\theta}{dx}$

$= \left(\frac{dy}{d\theta}\right) \cdot \frac{1}{\left(\frac{dx}{d\theta}\right)}$

$= \frac{\sqrt{3}\cos\theta}{-2\sin\theta}$

$\frac{dy}{dx} = -\frac{\sqrt{3}}{2}\cot\theta$ 05

$\left(\frac{dy}{dx}\right)_{\theta=\frac{\pi}{3}} = -\frac{\sqrt{3}}{2}\cot\frac{\pi}{3} = -\frac{1}{2}$

$x = 2\cos\theta, y = \sqrt{3}\sin\theta$

$\theta = \frac{\pi}{3} \Rightarrow x = 1, y = 3/2 \Rightarrow P(1, \frac{3}{2})$ 05

$P$ யில் தொடலியின் சமன்பாடு

$$\frac{y-\frac{3}{2}}{x-1}=-\frac{1}{2}$$

$2y-3=-x+1$

$\Rightarrow x+2y-4=0$ 05

$\theta=\alpha$ இல் $Q\equiv\left(2\cos\alpha,\sqrt{3}\sin\alpha\right)$

$P$ யில் தொடலியின் சமன்பாடு

$$\frac{y-\frac{3}{2}}{x-1}=2$$

$4x-2y-1=0$ 05

$\left(2\cos\alpha,\sqrt{3}\sin\alpha\right)\Rightarrow 8\cos\alpha-2\sqrt{3}\sin\alpha=1$ 05

8) $\lambda\in\mathbb{Z}$ ஆயிருக்க $P\left(\lambda,2\lambda-1\right)$ இற்கூடாகச் செல்லும் படித்திறன் $\frac{1}{2}$ ஐ உடையதுமான கோட்டின் சமன்பாட்டைக் காண்க. இக்கோடு $x, y$ அச்சுக்களை முறையே $A, B$ எனும் புள்ளிகளில் வெட்டின் $AB=\frac{\sqrt{5}}{2}|3\lambda-2|$ எனக்காட்டுக. $AB=2\sqrt{5}$ எனின் $\lambda$ ஐக் கண்டு $\Delta AOB$ பரப்பு 4 சதுர அலகுகள் எனக்காட்டுக.

$P\equiv\left(\lambda,2\lambda-1\right)$

கோட்டின் சமன்பாடு

$$\frac{y-(2\lambda-1)}{x-\lambda}=\frac{1}{2}$$ 05

$2y-2(2\lambda-1)=x-\lambda$

$x-2y+(3\lambda-2)=0$

$y=0\Rightarrow x=-(3\lambda-2)\Rightarrow A\equiv(-(3\lambda-2),0)$

$x=0\Rightarrow y=\frac{3\lambda-2}{2}\Rightarrow B\equiv\left(0,\frac{3\lambda-2}{2}\right)$ 05

$$AB=\sqrt{[-(3\lambda-2)]^2+\frac{(3\lambda-2)^2}{4}}$$

$AB=\frac{\sqrt{5}}{2}|3\lambda-2|=2\sqrt{5}$ 05

$|3\lambda-2|=4$

$3\lambda-2=\pm4$


$$\left.\begin{array}{l}(+)\Rightarrow\lambda=2\\(-)\Rightarrow\lambda=-\frac{2}{3}\end{array}\right\}\Rightarrow\lambda=2,\because\lambda\in\mathbb{Z}$$ 05

$\lambda=2\Rightarrow A\equiv(-4,0),B\equiv(0,2)$

$\Delta AOB$ பரப்பு $=\frac{1}{2}\times|-4|\times2=4$ 05

9) $x^2+y^2-4x-6y+11=0$ எனும் வட்டத்தை $x+y-3=0$ எனும் கோடு தொடும் எனக்காட்டி, தொடுபுள்ளியின் ஆள்கூறைக்காண்க. $x+y-3=0$ இற்கு சமாந்தரமான வட்டத்திற்கான மற்றய தொடலியின் சமன்பாடு $x+y-7=0$ எனக்காட்டுக.

$x^2+y^2-4x-6y+11=0$




மையம் $C\equiv(2,3)$

ஆரை $r=\sqrt{g^2+f^2-c}$

$=\sqrt{4+9-11}$ 05

$r=\sqrt{2}$

$x+y-3=0$ இற்கு

$C(2,3)$ இல் இருந்தான $\perp$ தூரம் $=\dfrac{|2+3-3|}{\sqrt{1+1}}$ 05

$=\dfrac{2}{\sqrt{2}}=\sqrt{2}$

$\therefore$ ஆரை $=\perp$ தூரம் $\Rightarrow$ தொடும்.

$x^2+y^2-4x-6y+11=0$

$x+y-3=0\Rightarrow y=3-x$

$\therefore x^2+(3-x)^2-4x-6(3-x)+11=0$

$\therefore x^2-2x+1=0\Rightarrow(x-1)^2=0\Rightarrow x=1\Rightarrow y=2$ 05

$N\equiv(1,2)$

$M\equiv(\bar{x},\bar{y})$ என்க $\Rightarrow\dfrac{\bar{x}+1}{2}=2,\dfrac{\bar{y}+2}{2}=3$

$\Rightarrow\bar{x}=3,\bar{y}=4\Rightarrow M(3,4)$ 05

மற்றைய தொடலி $x+y+\lambda=0$

$(3,4)\Rightarrow\lambda=-7$

$\therefore x+y-7=0$ 05

10) $f(x)=6\cos^2 x+16\sin x\cos x-6\sin^2 x+3$ எனக்கொள்வோம். $f(x)$ ஐ வடிவம் $a\cos(2x-\alpha)+b$ எனும் வடிவில் எடுத்துரைக்க. இங்கு $a(>0), b, \alpha\left(0<\alpha<\dfrac{\pi}{2}\right)$ என்பன கணிக்கப்படவேண்டிய மாறிலிகள். $-7\leq f(x)\leq 13$ **என்பதை உய்த்தறிக.**

$f(x)=6\cos^2 x+16\sin x\cos x-6\sin^2 x+3$

$=6(\cos^2 x-\sin^2 x)+16\sin x\cos x+3$

$=6\cos 2x+8\sin 2x+3$ 05

$=2(3\cos 2x+4\sin 2x)+3$

$=2\times 5\left(\dfrac{3}{5}\cos 2x+\dfrac{4}{5}\sin 2x\right)+3$

$=10(\cos 2x\cos\alpha+\sin 2x\sin\alpha)+3$ இங்கு $\cos\alpha=\dfrac{3}{5}$, $\sin\alpha=\dfrac{4}{5}$

$f(x)=10\cos(2x-\alpha)+3$

$f(x)=9\cos(2x-\alpha)+b;$

$a=10,\ \ b=3,\ \ \alpha=\cos^{-1}\left(\dfrac{3}{5}\right)$

05 05

$-1\leq\cos(2x-\alpha)\leq 1$ 05

$\Rightarrow -10\leq 10\cos(2x-\alpha)\leq 10$

$\Rightarrow -10+3\leq 10\cos(2x-\alpha)+3\leq 10+3$

$\Rightarrow -7\leq f(x)\leq 3$ 05



SLTC
*Research University*

# Inspire. Innovate. Engineer.

## Undergraduate Degrees

**Bachelor of Science (Hons) in Engineering in Civil Engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Information and communication engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Power Systems**

**Bachelor of Science (Hons) in Engineering in Telecommunication Engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Engineering Management**

**Bachelor of Science (Hons) in Engineering in Mechatronics Engineering**

RMIT UNIVERSITY

### RMIT University
### RMIT Australia

- Bachelor of Engineering (Hons) Mechanical Engineering
- Bachelor of Engineering (Hons) Civil & Infrastructure
- Bachelor of Engineering (Hons) Automotive Engineering
- Bachelor of Engineering (Hons) Aerospace Engineering
- Bachelor of Engineering (Hons) Advanced Manufacturing & Mechatronics

### RMIT Vietnam

- Bachelor of Engineering (Hons) Electrical & Electronic Engineering
- Bachelor of Engineering (Hons) Robotics and Mechatronics Engineering

### DEAKIN University, Australia

- Bachelor of Civil Engineering (Hons)
- Bachelor of Electrical & Electronic Engineering
- Bachelor of Mechatronics Engineering

Lancaster University

### Lancaster University,UK

- Bachelor of Engineering (Hons)

THE UNIVERSITY OF AUCKLAND NEW ZEALAND

### University of Auckland, New Zealand

- Bachelor of Engineering (Hons)

Deakin University CRICOS Provider Code 00113B | RMIT CRICOS Provider Code 00122A

*School of* **Engineering**

**www.sltc.ac.lk**

**0112 100 500**


WE PROVIDE BEST QUALITY PRODUCTS
Northway
Family Mart
Save Money. Live Better.
Nestle
CERELAC
Viva
LACTOGEN
DAWN
LUX
Coca-Cola
Maggi
Sprite
pepsi
Glucose
Uppumadam Junction, K.K.S Road,

# Pirakanth

## *Photo Copy Centre*





**School & Office**
**Stationary Items,**
**Photo Copy,**
**Colour Print,**
**Colour Photo Copy,**
**Binding, Laminating**

**55, Palaly Road,**
**Thirunelvely,**
**Jaffna**

**T.P: 077 223 8447**
**021 221 6828**
**Viber: 0776616153**
**Email: grpirakanth@gmail.com**

11)

a) இருபடிச்சமன்பாடொன்றின் மூலங்களின் பெருக்குத்தொகை மறையாக இருப்பின் அச்சமன்பாடு மெய் மூலங்களையே கொண்டிருக்கும் எனக்காட்டுக.

$0<k<2$ எனின் $(k-2)x^2-2(k-1)x+k=0$ எனும் சமன்பாடு மெய்மூலங்களைக் கொண்டிருக்கும் என **உய்த்தறிக**.

$0<k<2$ ஆயிருக்க $(k-2)x^2-2(k-1)x+k=0$ என்பதன் மூலங்கள் முறையே $\alpha,\beta$ எனின் $|\alpha|+|\beta|=\dfrac{2}{2-k}$ எனக் காட்டுக.

**இதிலிருந்து,** $|\alpha|,|\beta|$ மூலங்களாக கொண்ட இருபடிச்சமன்பாட்டைக் காண்க.

$ax^2+bx+c=0$ என்க இங்கு $a,b,c\in\mathbb{R}$ with $a\neq 0$

மூலங்கள் $(\alpha,\beta)$

$\alpha\beta=\dfrac{c}{a}<0$

$\Rightarrow ac<0\Rightarrow -ac>0$ 05

Consider $\Delta=b^2-4ac$ 05

$\Rightarrow\Delta>0$

$\therefore$ மூலங்கள் மெய் 05 **15**

---

$(k-2)x^2-2(k-1)x+k=0\rightarrow(\alpha,\beta)$

$\alpha+\beta=\dfrac{2(k-1)}{k-2},\alpha\beta=\dfrac{k}{k-2}$

05 05

$0<k<2$ எனின் $\dfrac{k}{k-2}<0$ 05

$\Rightarrow\alpha\beta<0$ 05

$\therefore$ மெய் மூலங்களை கொண்டிருக்கும். 05 **25**

---

Consider $(|\alpha|+|\beta|)^2=|\alpha|^2+|\beta|^2+2|\alpha||\beta|$ 05

$=\alpha^2+\beta^2+2|\alpha\beta|$

$=\alpha^2+\beta^2-2\alpha\beta,\quad \because\alpha\beta<0$ 05

05

$=(\alpha+\beta)^2-4\alpha\beta$ 05

$=4\dfrac{(k-1)^2}{(k-2)^2}-\dfrac{4k}{k-2}$

$=\dfrac{4\left[(k-1)^2-k(k-2)\right]}{(k-2)^2}$

$$(|\alpha|+|\beta|)^2 = \frac{4\times 1}{(k-2)^2}$$ 05

$$\Rightarrow |\alpha|+|\beta| = \frac{2}{|k-2|},$$ 05 $\because |\alpha|+|\beta|>0$

$$= \frac{2}{-(k-2)},$$ $\because k<2$ 05

$$\Rightarrow |\alpha|+|\beta| = \frac{2}{2-k}$$

$$|\alpha||\beta| = |\alpha\beta| = -\alpha\beta,$$ $\because \alpha\beta<0$ 05

$$= \frac{-k}{k-2}$$

$$|\alpha||\beta| = \frac{k}{2-k}$$ 05

$\therefore |\alpha|, |\beta|$ ஐ மூலங்களாக கொண்ட சமன்பாடு

$$(x-|\alpha|)(x-|\beta|)=0$$

$$\Rightarrow x^2 - (|\alpha|+|\beta|)x + |\alpha||\beta| = 0$$ 05

$$\Rightarrow x^2 - \frac{2}{2-k}x + \frac{k}{2-k} = 0$$ 05

$$\Rightarrow (2-k)x^2 - 2x + k = 0$$

55

---

b) $f(x)=ax^2+2x+2b$ எனவும் $g(x)=cx^2+2x+b$ எனவும் கொள்வோம். இங்கு $a,b,c\in\mathbb{R}$ ஆகும்.

$f(x)$ ஆனது $(x+1),(x-2)$ என்பவற்றால் வகுக்கப்படும் போது மீதிகள் முறையே $-6,12$ ஆகவும் $f(x)+g(x)$ என்னும் பல்லுறுப்பியிற்கு ஒரு காரணி $(x+2)$ எனவும் தரப்படின் $a,b,c$ இன் பெறுமானங்களைக் காண்க.

மேலும் $a,b,c$ என்பவற்றின் இப்பெறுமானங்களுடன் எல்லா $x\in\mathbb{R}$ இற்கும் $f(x)\geq 3g(x)$ எனக்காட்டுக.

$$f(x)=ax^2+2x+2b$$

$(x+1)$ ஆல் வகுக்க மீதி $f(-1)=-6$ 05

$$\Rightarrow a\times(-1)^2+2\times(-1)+2b=-6$$

$$\Rightarrow a+2b=-4$$ 05 ............(1)

$(x-2)$ ஆல் வகுக்க மீதி $f(2)=12$ 05

$$\Rightarrow a\times 2^2+2\times 2+2b=12$$

$$\Rightarrow 4a+2b=8$$ 05 ............(2)

$(2)-(1) \quad \Rightarrow 3a=12$

$\Rightarrow a = 4$ [05]

$(1) \rightarrow b = -4$

$g(x) = cx^2 + 2x + b$

$f(x) + g(x) = (a + c)x^2 + 4x + 3b$ [05]

$f(x) + g(x) = (4 + c)x^2 + 4x - 12,$

$(x + 2)$ ஆல் வகுக்க மீதி $f(2) + g(2) = 0, \because (x - 2)$ காரணி [05]

$\Rightarrow (4 + c) \times (2)^2 + 4 \times (-2) - 12 = 0$

$4 + c - 2 - 3 = 0$

$\Rightarrow c = 1$ [05]

[40]

---

$\therefore a = 4, b = -4, C = 1$

$f(x) = 4x^2 + 2x - 8$

$g(x) = x^2 + 2x - 4$

Consider $f(x) - 3g(x) = 4x^2 + 2x - 8 - 3(x^2 + 2x - 4)$

$= x^2 - 4x + 4$ [05]

$= (x - 2)^2$

$\geq 0$ [05]

$\Rightarrow f(x) - 3g(x) \geq 0$

$\Rightarrow f(x) \geq 3g(x)$ [05]

[15]

---

12)

a) SRINIVASA RAMANUJAN எனும் பெயரில் உள்ள எழுத்துக்களில் 5 எழுத்துக்களாக தெரிந்து ஆக்கப்படக்கூடிய 5 எழுத்துள்ள சொல்லில்,

i) 5 எழுத்துக்களும் வேறு வேறானவையாக இருப்பின்

ii) இரண்டு எழுத்துக்கள் A ஆயும், மற்றைய மூன்றும் A தவிர்ந்த வேறு வேறானவையாயும் இருப்பின்

iii) A,N தவிர்ந்த எவையேனும் 5 எழுத்துக்களாயிருப்பின் அமைக்கத்தக்க சொற்களின் எண்ணிக்கையைக் காண்க.

SRINIVASA RAMANUJAN

S-2, R-2, I-2, N-3, V-1, A-5, M-1, U-1, J-1

i. ${}^9P_5 = \dfrac{9!}{4!} = 15120$ [05]

[05]

[10]

---

ii. ${}^8C_3 \times \dfrac{5!}{2!} = \dfrac{8!}{5! \times 3!} \times \dfrac{5!}{2!} = 3360$ [05]

[05]

[10]

---

iii.

| வகை | சேர்மானம் | வரிசைமாற்றம் |
|---|---|---|
| X X o o √ | ${}^{3}C_2 \times {}^{5}C_1 = 15$ 05 | $15\left(\frac{5!}{2!\times 2!}\right) = 450$ 05 |
| X X √ O □ | ${}^{3}C_1 \times {}^{6}C_3 = 60$ 05 | $60\left(\frac{5!}{2!}\right) = 3600$ 05 |
| X √ O □ Δ | ${}^{7}C_5 = 21$ 05 | $21\times 5! = 2520$ 05 |

∴மொத்தம் = 450 + 3600+2520

= 6570 10

40

---

b) $r \in \mathbb{Z}^+$ இற்கு $U_r = \dfrac{7r^2+14r-1}{(r+1)(r+2)}$ எனக் கொள்வோம்.

$r \in \mathbb{Z}^+$ இற்கு $U_r = \dfrac{Ar}{r+1} - \dfrac{Br+C}{r+2}$ ஆக இருக்கத்தக்கதாக $A, B, C$ எனும் மாறிலிகளின் பெறுமானங்களைக் காண்க.

இதிலிருந்து $r \in \mathbb{Z}^+$ இற்கு $\dfrac{1}{8^r}U_r = f(r) - f(r+1)$ ஆகுமாறு $f(r)$ ஐக் கண்டு, $n \in \mathbb{Z}^+$ இற்கு $\sum_{r=1}^{n}\left(\dfrac{U_r}{8^r}\right) = \dfrac{1}{2} - \dfrac{(n+1)}{8^n(n+2)}$ எனக்காட்டுக.

முடிவில் தொடர் $\sum_{r=1}^{\infty}\left(\dfrac{U_r}{8^r}\right)$ ஒருங்குகிறது என உய்த்தறிந்து, அதன் கூட்டுத்தொகையைக் காண்க.

அத்துடன் $\dfrac{5}{12} \le \sum_{r=1}^{n}\left(\dfrac{U_r}{8^r}\right) < \dfrac{1}{2}$ எனவும் காட்டுக.

$$U_r = \frac{7r^2+14r-1}{(r+1)(r+2)} \quad \text{..................(1)}$$

$$U_r = \frac{Ar}{(r+1)} - \frac{Br+C}{(r+2)} \quad \text{..................(2)}$$

$$\Rightarrow \frac{7r^2+14r-1}{(r+1)(r+2)} = \frac{Ar(r+2)-(Br+C)(r+1)}{(r+1)(r+2)}$$

$$\Rightarrow 7r^2+14r-1 = Ar^2+2Ar-Br^2-Br-Cr-C$$

$$\Rightarrow 7r^2+14r-1 = (A-B)r^2+(2A-B-C)r-C$$ 05

$[r^2] \Rightarrow 7 = A-B$ ..................(3)

$[r] \Rightarrow 14 = 2A-B-C$ ..................(4)

மாறிலி $\Rightarrow -1 = -C \Rightarrow 1 = C$ 05

$(4) \Rightarrow 15 = 2A-B$

$(4)-(3) \Rightarrow 8 = A$

$(3) \Rightarrow B = 1$ 05

15

$$(2) \Rightarrow \qquad U_r = \frac{8r}{(r+1)} - \frac{r+1}{(r+2)} \qquad \boxed{05}$$

$$\frac{U_r}{8^r} = \frac{r}{8^{r-1}(r+1)} - \frac{r+1}{8^r(r+2)} \qquad \boxed{05}$$

$$\frac{U_r}{8^r} = f(r) - f(r=1); \text{ இல் } \quad f(r) = \frac{r}{8^r(r+1)} \qquad \boxed{05}$$

$$\frac{U_r}{8^r} = f(r) - f(r+1)$$

$$r=1 \Rightarrow \quad \frac{U_1}{8^1} = f(1) - f(2)$$

$$r=2 \Rightarrow \quad \frac{U_2}{8^2} = f(2) - f(3) \qquad \boxed{05}$$

$$r=3 \Rightarrow \quad \frac{U_3}{8^3} = f(3) - f(4)$$

$$r=n-1 \Rightarrow \frac{U_{n-1}}{8^{n-1}} = f(n-1) - f(n)$$

$$\boxed{05}$$

$$r=n \quad \Rightarrow \quad \frac{U_n}{8^n} = f(n) - f(n+1)$$

---

$$\text{கூட்ட } \sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} = f(1) - f(n+1) \qquad \boxed{05}$$

$$= \frac{1}{1 \times 2} - \frac{n+1}{8^n(n+2)} \qquad ;\text{ from(5)}$$

$$\boxed{05}$$

$$\sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} = \frac{1}{2} - \frac{n+1}{8^n(n+2)} \qquad \boxed{05} \qquad \ldots\ldots\ldots\ldots\ldots\ldots(6)$$

$$\boxed{40}$$

---

$$\sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} = \frac{1}{2} - \frac{1+1/n}{8^n(1+2/n)} \qquad \boxed{05}$$

$$n \to \infty \Rightarrow \sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} \to \frac{1}{2} \Rightarrow \text{ஒருங்கும்.} \qquad \boxed{05}$$

$$\sum_{r=1}^{\infty} \frac{U_r}{8^r} = \frac{1}{2} \qquad \boxed{05}$$

$$\frac{U_r}{8^r} = \frac{7r^2+14r-1}{8^r(r+1)(r+2)}$$

$$\frac{U_1}{8^1} = \frac{7+14-1}{8(2)(3)} = \frac{20}{8 \times 2 \times 3} = \frac{5}{12} \qquad \boxed{05}$$

$r \in Z^+$ இற்கு $\frac{U_r}{8^r} = \frac{7r^2 + 14r - 1}{8^r(r+1)(r+2)} > 0$ 05

$\frac{U_1}{8^1} \le \sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} < \sum_{r=1}^{\infty} \frac{U_r}{8^r}$ 05

$\Rightarrow \frac{5}{12} \le \sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} < \frac{1}{2}$ 05

$\Rightarrow \frac{5}{12} \le \sum_{r=1}^{n} \frac{U_r}{8^r} < \frac{1}{2}$

35

---

13)

a) $A = \begin{pmatrix} 1 & 3 \\ 2 & 0 \\ a & 2 \end{pmatrix}, B = \begin{pmatrix} 0 & 1 \\ 2 & b \\ -1 & 0 \end{pmatrix}, C = \begin{pmatrix} 2 & 5 \\ -2 & 3 \end{pmatrix}$ எனக் கொள்வோம் இங்கு $a, b \in \mathbb{R}$ .

$A^T B = C$ எனவும் கொள்வோம் $a = 2, b = 2$ எனக் காட்டுக.

$\lambda \in \mathbb{R}$ ஆயிருக்க தாயம் $P$ ஆனது $P = A^T B + \lambda D$ என வரையறுக்கப்படுகிறது. இங்கு $D = \begin{pmatrix} 1 & 1 \\ 1 & 2 \end{pmatrix}$ ஆகும். $\lambda$ இன் எப்பெறுமானத்திற்கும் $P^{-1}$ உண்டு எனக்காட்டுக.

இப்போது $\lambda = 1$ எனக்கொள்வோம். $P^{-1}$ ஐ எழுதி, **இதிலிருந்து** $EP = A^T B + 2D$ ஆகுமாறு $2 \times 2$ பருமனுள்ள தாயம் E ஐக் காண்க.

$A = \begin{pmatrix} 1 & 3 \\ 2 & 0 \\ a & 2 \end{pmatrix}, B = \begin{pmatrix} 0 & 1 \\ 2 & b \\ -1 & 0 \end{pmatrix}, C = \begin{pmatrix} 2 & 5 \\ -2 & 3 \end{pmatrix}$

$A^T B = C$

$\Rightarrow \begin{pmatrix} 1 & 2 & a \\ 3 & 0 & 2 \end{pmatrix}, \begin{pmatrix} 0 & 1 \\ 2 & b \\ -1 & 0 \end{pmatrix} = \begin{pmatrix} 2 & 5 \\ -2 & 3 \end{pmatrix}$ 05

$\begin{pmatrix} 0+4-a & 1+2b+0 \\ 0+0-2 & 3+0+0 \end{pmatrix} = \begin{pmatrix} 2 & 5 \\ -2 & 3 \end{pmatrix}$

$\Rightarrow \begin{pmatrix} 4-a & 2b+1 \\ -2 & 3 \end{pmatrix} = \begin{pmatrix} 2 & 5 \\ -2 & 3 \end{pmatrix}$ 10

$\therefore 4 - a = 2 \Rightarrow a = 2$ 05

$2b + 1 = 5 \Rightarrow b = 2$ 05

25

---

$P = A^T B + \lambda D$ ………….(1)

$= C + \lambda D$

$= \begin{pmatrix} 2 & 5 \\ 2 & 3 \end{pmatrix} + \lambda \begin{pmatrix} 1 & 1 \\ 1 & 2 \end{pmatrix}$ 05

$P=\begin{pmatrix}\lambda+2 & \lambda+5\\ \lambda-2 & 2\lambda+3\end{pmatrix}$ 05

$|P|=(\lambda+2)(2\lambda+3)-(\lambda-2)(\lambda+5)$ 05

$=\lambda^2+4\lambda+16$

$|P|=(\lambda+2)^2+12$ ............(2) 05

எல்லா $\lambda\in\mathbb{R}$ இற்கும் $|P|\neq 0$ 05

$\therefore$ எல்லா $\lambda$ இற்கும் $P^{-1}$ உண்டு 05

30

---

$\lambda=1$ எனின் $Q\Rightarrow |P|=21$

$P=\begin{pmatrix}3 & 6\\ -1 & 5\end{pmatrix}$

$\Rightarrow P^{-1}=\frac{1}{|P|}\begin{pmatrix}5 & -6\\ 1 & 3\end{pmatrix}$ 05

$P^{-1}=\frac{1}{21}\begin{pmatrix}5 & -6\\ 1 & 3\end{pmatrix}$

$\Rightarrow P^{-1}=\begin{pmatrix}\frac{5}{21} & \frac{-6}{21}\\ \frac{1}{21} & \frac{3}{21}\end{pmatrix}$

$\Rightarrow P^{-1}=\begin{pmatrix}\frac{5}{21} & \frac{-2}{7}\\ \frac{1}{21} & \frac{1}{7}\end{pmatrix}$ 05

10

---

$EP=A^TB+2D$

$=(A^TB+D)+D$ 05

$EP=P+D,\ \because$ D இல் $\lambda=1$ ஐ இட

$\Rightarrow (EP)P^{-1}=(P+D)P^{-1}$ 05

$E(PP^{-1})=PP^{-1}+DP^{-1}$

$EI=I+DP^{-1}$ 05

$\Rightarrow E=\begin{pmatrix}1 & 0\\ 0 & 1\end{pmatrix}+\begin{pmatrix}1 & 1\\ 1 & 2\end{pmatrix}\begin{pmatrix}\frac{5}{21} & \frac{-2}{7}\\ \frac{1}{21} & \frac{1}{7}\end{pmatrix}$

$=\begin{pmatrix}1 & 0\\ 0 & 1\end{pmatrix}+\begin{pmatrix}\frac{5}{21}+\frac{1}{21} & \frac{-2}{7}+\frac{1}{7}\\ \frac{5}{21}+\frac{2}{21} & \frac{-2}{7}+\frac{2}{7}\end{pmatrix}$ 05


$$= \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix} + \begin{pmatrix} \frac{2}{7} & \frac{-1}{7} \\ \frac{1}{3} & 0 \end{pmatrix} \quad \Rightarrow E = \begin{pmatrix} 1+\frac{2}{7} & \frac{-1}{7} \\ \frac{1}{3} & 1 \end{pmatrix}$$

$$\Rightarrow E = \begin{pmatrix} \frac{9}{7} & \frac{-1}{7} \\ \frac{1}{3} & 1 \end{pmatrix}$$ 05

25

---

b) $Z$ எனும் சிக்கல் எண் $Z = r(\cos\theta + i\sin\theta)$ ; $r > 0,\ 0 < \theta < \frac{\pi}{2}$ எனக்கொள்வோம். $P$ என்பது சிக்கல் எண் $Z$ ஐ ஆகண் வரிப்படத்தில் வகைகுறிக்கும் புள்ளியாகும். இது $(2,0)$ ஐ மையமாகவும், உற்பத்தி ஊடாகவும் செல்லும் வட்டத்தில் உள்ளது. $Q$ என்பது $(Z-2)$ எனும் சிக்கல் எண்ணை வகைக்குறிக்கும் புள்ளியாகும். ஆகண் வரிப்படத்தில் $Q$ ஐக் குறித்து, **இதிலிருந்து** $Z-2 = 2(\cos 2\theta + i\sin 2\theta)$ எனக்காட்டுக. இப்போது $\theta = \frac{\pi}{6}$ எனக்கொள்வோம். $R$ ஆனது $2i$ எனும் சிக்கல் எண் வகைக்குறிக்கும் புள்ளியாகும். $\{(Z-2)+2i\}$ எனும் சிக்கல் எண் ஆகண் வரிப்படத்தில் வகைக்குறிக்கும் புள்ளி $S$ எனின், $S$ இருக்கும் இடத்தை விளக்கி $\tan\left(\frac{\pi}{12}\right) = 2-\sqrt{3}$ என்பதை **உய்த்தறிக**.



$Z = r(\cos\theta + i\sin\theta) \Rightarrow P(r,\theta)$

$(2\cos\theta)\times 2 = r \Rightarrow r = 4\cos\theta$

$|Z-2| = OQ = 2$

$\therefore Z-2 = 2(\cos 2\theta + i\sin 2\theta)$ 05 15

---

$\theta = \frac{\pi}{6} \Rightarrow Z-2 = 2\left(\cos\frac{\pi}{3} + i\sin\frac{\pi}{3}\right)$

$= 1+\sqrt{3}i$ 05

$(Z-2)+2i = Z_0$ (என்க) என்பது OQ,OR ஐ அடுத்துள்ள பக்கங்களாக கொண்டு வரையப்படும் இணைகரம் ORSQ எனின் S இல் இருக்கும். 05

$Z_0 = (Z-2)+2i$

$= (1+\sqrt{3}i)+2i$

$Z_0 = 1+(\sqrt{3}+2)i$ 05 15

---

$OR = OR \Rightarrow \therefore$ OQSR ஒரு சாய்சதுரம்

$\Delta\ OSN$ இல் $\tan\frac{\pi}{12} = \frac{\text{Re}(Z_0)}{\text{Im}(Z_0)}$ 05

$= \frac{1}{2+\sqrt{3}}$ .

$\Rightarrow \tan\frac{\pi}{2} = 2-\sqrt{3}$ 05 10

---

c) $(\cos\theta + i\sin\theta)^3 = (4\cos^3\theta - 3\cos\theta) + i(3\sin\theta - 4\sin^3\theta)$ எனக் காட்டுக.

இம்முடிவையும், த மோய்வரின் தேற்றத்தையும் பயன்படுத்தி,

i) $\sin 3\theta = 3\sin\theta - 4\sin^3\theta$ எனவும்

ii) $\cos 3\theta = 4\cos^3\theta - 3\cos\theta$ எனவும் காட்டுக.

$(\cos\theta + i\sin\theta)^3 = \cos^3\theta + 3\cos^2\theta(i\sin\theta) + 3\cos\theta(i\sin\theta)^2 + (i\sin\theta)^3$ 05

$= \cos^3\theta + 3i\sin\theta(1-\sin^2\theta) - 3\cos\theta(1-\cos^2\theta) - i\sin^3\theta$ 05 10

---

$\Rightarrow (\cos\theta + i\sin\theta)^3 = (4\cos^3\theta - 3\cos\theta) + i(3\sin\theta - 4\sin^3\theta)$

$\Rightarrow \cos 3\theta + i\sin 3\theta = (4\cos^3\theta - 3\cos\theta) + i(3\sin\theta - 4\sin^3\theta)$, $\because$ (த மோய்வரின் தேற்றப்படி)

(மெய்) $\Rightarrow \cos 3\theta = 4\cos^3\theta - 3\cos\theta$ 05

(கற்பனை) $\Rightarrow \sin 3\theta = 3\sin\theta - 4\sin^3\theta$ 05 10

---

14)

a) $x \neq 1$ இற்கு $f(x) = \dfrac{6x^2+9x+5}{(x-1)^3}$ எனக்கொள்வோம். $x \neq 1$ இற்கு $f(x)$ இன் பெறுதி $f'(x)$ ஆனது $f'(x) = \dfrac{-6(x+1)(x+4)}{(x-1)^4}$ இனால் தரப்படுகிறது எனக்காட்டுக.

**இதிலிருந்து**, $f(x)$ திடமாக அதிகரிக்கும், திடமாகக் குறையும் $x$ இன் வீச்சுக்களைக் காண்க.

அணுகு கோடுகள், வெட்டுத்துண்டு, திரும்பல் புள்ளிகள் ஆகியவற்றைக் காட்டி $y = f(x)$ இன் வரைபை பரும்படியாக வரைக.

$x \neq 1$ இற்கு $f(x)$ இன் இரண்டாம் பெறுதி $f''(x)$ ஆனது $f''(x) = \dfrac{6(x+7)(2x+3)}{(x-1)^5}$ எனத்தரப்படின், $y = f(x)$ இன் வரைபின் விபத்திப் புள்ளிகளின் $x$ ஆள்கூறுகளைக் காண்க.

$$f(x) = \frac{x^2+9x+5}{(x-1)^3};\, x \neq 1$$

$$\Rightarrow f'(x) = \frac{(x-1)^3(12x+9)-(6x^2+9x+5).3(x-1)^2.1}{(x-1)^6}$$ 15

$$= \frac{3(x-1)^2\left[(x+1)(4x+3)-(6x^2+9x+5)\right]}{(x-1)^6}$$

$$= \frac{3\left[-2x^2-10x-8\right]}{(x-1)^4}$$

$$f'(x) = \frac{-6(x^2+5x+4)}{(x-1)^4}$$

$$\Rightarrow f'(x) = \frac{-6(x+1)(x+4)}{(x-1)^4};\, x \neq 1$$ 05

20


---

$x = 1$ இல் $f'(x)$ வரையறுக்கப்படாது 05

$x = 1$ நிலைக்குத்து அணுகுகோடாகும்.

நிலையான புள்ளிகளில் $f'(x) = 0$

$\Rightarrow x = -1, -4$ 05




$f(x)$ திடமாக அதிகரிக்கும் வீச்சு $-4 < x < -1$ 05

$f(x)$ திடமாக குறையும் வீச்சு $-\infty < x < -4$ or $-1 < x < 1$ or $1 < x < +\infty$ 05

$y = f(x)$

$$y = \frac{6x^2 + 9x + 5}{(x-1)^3}$$

$x = 0 \Rightarrow y = -5 \Rightarrow (0,-5)$ [05]

$y = 0 \Rightarrow 6x^2 + 9x + 5 = 0$

$\Delta = 81 - 4\times 6\times 5 < 0$ [05]

$\therefore$ வரைபு $x$ அச்சை வெட்டாது

$$y = \frac{x^2\left(6 + \frac{9}{x} + \frac{5}{x^2}\right)}{x^3\left(1 - \frac{1}{x}\right)^3} = \frac{\left(6 + \frac{9}{x} + \frac{5}{x^3}\right)}{x\left(1 - \frac{1}{x}\right)^3}$$

$x \to \pm\infty \Rightarrow y \to 0$

$\therefore$ $y = 0$ என்பது கிடை அணுக்கோடு. [05]

$$y = \frac{6x^2 + 9x + 5}{(x-1)^3}$$


நிலையான $x = -1, -4$

$x = -1 \Rightarrow y = -\frac{1}{4} \Rightarrow (-1, -\frac{1}{4}) \rightarrow$ உயர்வு [05]

$x = -4 \Rightarrow y = -\frac{13}{25} \Rightarrow (-4, -\frac{13}{25}) \rightarrow$ இழிவு [05]

[65]

---




[15]

---

$$\frac{d^2y}{dx^2} = f''(x)$$

$$\frac{d^2y}{dx^2} = 12\frac{(x+7)\left(x+\frac{3}{2}\right)}{(x-1)^5} = 0$$ எனின் $x = -7, -\frac{3}{2}$

$x = -7 - \delta \Rightarrow \frac{d^2y}{dx^2} < 0$

$\Rightarrow x = -7$ இல் விபத்தி [05]

$x = -7 + \delta \Rightarrow \frac{d^2y}{dx^2} > 0$

$x = -\frac{3}{2} - \delta \Rightarrow \frac{d^2y}{dx^2} > 0$


$\Rightarrow x = -\frac{3}{2}$ இல் விபத்தி [05]

$x = -\frac{3}{2} + \delta \Rightarrow \frac{d^2y}{dx^2} < 0$

$\therefore$ விபத்திப்புள்ளிகள் $x = -7, -\frac{3}{2}$ [10]

---

b) அருகில் உள்ள உருவில் நிழற்றப்பட்ட பிரதேசம் ஆனது $AB = y\ m,\ BC = x\ m$ எனும் நீள, அகலங்களையும், மாறாச்சுற்றளவு $2p\ m$ ஐயும் கொண்ட செவ்வகத்தில் இருந்து ஒவ்வொரு உச்சிகளையும் மையமாகவும் $\frac{x}{2}\ m$ ஐ ஆரையாகவும் கொண்ட கால் வட்டங்கள் நீக்கிப் பெறப்பட்ட புற்தரையைக் காட்டுகிறது. $0 < x < p$ இற்கு புற்றரையின் பரப்பளவு $\Delta(x)$ ஆனது




$\Delta(x) = \left\{ px - \left(\frac{\pi+4}{4}\right)x^2 \right\} m^2$ இனால் தரப்படுகிறது எனக்காட்டுக.


$x = \frac{2p}{\pi+4}\ m$ இல் பரப்பு $\Delta$ உயர்வு எனக்காட்டி, அப்போது $x : y = 2 : (\pi+2)$ எனவும் காட்டுக.

$2(x+y) = 2p$

$\Rightarrow x + y = p$ ............ [05]

பரப்பளவு $\Delta(x) =$ செவ்வகப்பரப்பு-4(கால்வட்டப்பரப்பு)

$= xy - \pi\left(\frac{x}{2}\right)^2$ [10]




$\Delta(x) = xy - \frac{\pi x^2}{4}$

$= x(p-x) - \frac{\pi x^2}{4}$ [05]

[20]

$$\Delta(x) = px - \frac{(\pi+4)}{4}x^2$$

$x$ குறித்து வகையிட

$$\frac{d\Delta(x)}{dx} = p\times 1 - \frac{(\pi+4)}{4}\times 2x$$ 05

$$= p - \frac{(\pi+4)}{4}2x$$

$$\frac{d\Delta(x)}{dx} = -\frac{(\pi+4)}{2}\left[x - \frac{2p}{\pi+4}\right]$$

நிலையான புள்ளிகளில் $\frac{d\Delta(x)}{dx} = 0 \Rightarrow x = \frac{2p}{\pi+4}$ 05

$0 < x < \frac{2p}{\pi+4} \Rightarrow \frac{d\Delta(x)}{dx} > 0$ 05 $\Rightarrow x = \frac{2p}{\pi+4}$ இல் $\Delta$ உயர்வு

$\frac{2p}{\pi+4} < x < p \Rightarrow \frac{d\Delta(x)}{dx} < 0$

$x = \frac{2p}{\pi+4}$

$x(\pi+4) = 2(x+y);\ from(1)$

$x(\pi+2) = 2y$

$\frac{x}{y} = \frac{2}{\pi+2} \Rightarrow x : y = 2 : (\pi+2)$ 05

20

---

15)

a) எல்லா $x \in \mathbb{R}$ இற்கு,

$$x^5 - 4x^4 - 27x^2 - 10x - 28 \equiv \lambda(x+1)(x^2+4)^2 + \mu(x^2+4)^2 + \gamma(x+1)^2(x^2+4) + \delta x(x+1)^2$$

ஆகுமாறு $\lambda, \mu, \gamma, \delta$ ஆகிய மாறிலிகளின் பெறுமானங்களைக் காண்க.

**இதிலிருந்து** $\frac{x^5 - 4x^4 - 27x^2 - 10x - 28}{(x+1)^2(x^2+4)^2}$ ஐப் பகுதிப் பின்னங்களில் எழுதி,

$\int \frac{x^5 - 4x^4 - 27x^2 - 10x - 28}{(x+1)^2(x^2+4)^2}dx$ ஐக் காண்க.

b) $I = \int_{\frac{1}{\sqrt{2}}}^{1} \tan^{-1}\sqrt{2x^2-1}\,dx$ எனக்கொள்வோம். $I = \frac{\pi}{4} - \int_{\frac{1}{\sqrt{2}}}^{1} \frac{1}{\sqrt{2x^2-1}}dx$ எனக்காட்டி,

$\cos^{-1}\left(\frac{1}{\sqrt{2}x}\right) = \theta$ எனும் பிரதியீட்டைப் பயன்படுத்தி, $I$ இன் பெறுமானத்தைக் காண்க.

c) $\frac{d}{dx}\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right)=\frac{1}{2\sqrt{(x+1)(x+4)}}$ எனக்காட்டுக. இங்கு $x>-1$.

**இதிலிருந்து** $\int\frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx$ ஐக் கண்டு,

$\int_0^1\frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx=\frac{1}{2}\ln\left(\frac{\sqrt{5}+\sqrt{2}}{3}\right)$ எனக்காட்டுக.

a ஒரு மாறிலியாக உள்ளபோது பேறு $\int_0^a f(x)dx=\int_0^a f(a-x)dx$ ஐப்பயன்படுத்தி,

$\int_0^1\frac{1}{\sqrt{(x-2)(x-5)}}dx$ இன் பெறுமானத்தைக் காண்க.

(a) $x^5-4x^4-27x^2-10x-28\equiv\lambda(x+1)(x^2+4)^2+\mu(x^2+4)^2+\gamma(x+1)^2(x^2+4)+\delta x(x+1)^2$

$x=-1\Rightarrow -1-4-27+10-28=\lambda\times0+\mu\times25+\gamma_x o+\delta\times0\quad -50=25\mu\Rightarrow\mu=-2$ 05

$x^5-4x^4-27x^2-10x-28\equiv\lambda(x+1)(x^4+8x^2+16)+\mu(x^4+8x^2+16)+\gamma(x^2+2x+1)(x^2+4)+\delta x(x^2+2x+1)$ 05

$[x^5]\Rightarrow 1=\lambda$ 05

$[x^4]\Rightarrow -4=\lambda+\mu+\gamma$

$-4=1-2+\gamma\Rightarrow -3=\gamma$ 05

$[x^3]\Rightarrow 0=8\lambda+2\gamma+\delta\Rightarrow\quad\delta=-2$ 05

$\therefore\lambda=1,\mu=-2,\gamma=-3,\delta=-2$

$x^5-4x^4-27x^2-10x-28\equiv(x+1)(x^2+4)^2-2(x^2+4)^2-3(x+1)^2(x^2+4)-2x(x+1)^2$

$$\frac{x^5-4x^4-27x^2-10x-28}{(x+1)^2(x^2+4)^2}\equiv\frac{(x+1)(x^2+4)^2-2(x^2+4)^2-3(x+1)^2(x^2+4)-2x(x+1)^2}{(x+1)^2(x^2+4)^2}$$

$$\Rightarrow\frac{x^5-4x^4-27x^2-10x-28}{(x+1)^2(x^2+4)^2}\equiv\frac{1}{x+1}-\frac{2}{(x+1)^2}-\frac{3}{x^2+4}-\frac{2x}{(x^2+4)^2}$$ 05

$$\int\frac{x^5-4x^4-27x^2-10x-28}{(x+1)^2(x^2+4)^2}dx=\int\left\{\frac{1}{x+1}-\frac{2}{(x+1)^2}-\frac{3}{x^2+4}-\frac{2x}{(x^2+4)^2}\right\}dx$$

$$=\int\frac{1}{x+1}dx-2\int(x+1)^{-2}dx-3\int\frac{1}{4+x^2}dx-\int(x^2+4)^{-2}(2x)dx$$ 05

$$=\ln|1+x|-2\frac{(x+1)^{-1}}{-1\times1}-\frac{3}{2}\tan^{-1}\left(\frac{x}{2}\right)-\frac{(x^2+4)^{-1}}{-1}+C,$$

05 05 05 05

இங்கு C எதேட்சை மாறிலி

$$=\ln|1+x|+\frac{2}{x+1}-\frac{3}{2}\tan^{-1}\left(\frac{x}{2}\right)+\frac{1}{x^2+4}+C$$

55

(b) $I = \int_{1/\sqrt{2}}^{1} \tan^{-1}\sqrt{2x^2-1}dx$

$= \int_{1/\sqrt{2}}^{1} \left(\tan^{-1}\sqrt{2x^2-1}\right)dx$

$= \left[\left(\tan^{-1}\sqrt{2x^2-1}\right).x\right]_{1/\sqrt{2}}^{1} - \int_{1/\sqrt{2}}^{1} x \times \frac{1}{1+\left(\sqrt{2x^2-1}\right)^2} \times \frac{1}{2}(2x^2-1)^{-1/2} \times 4 \times dx$ 05 10

$= \tan^{-1}1 - \frac{1}{\sqrt{2}}\tan^{-1}0 - \int_{1/\sqrt{2}}^{1} \frac{2x^2}{2x^2\sqrt{2x^2-1}^2}dx$

$I = \frac{\pi}{4} - \int_{1/\sqrt{2}}^{1} \frac{1}{\sqrt{2x^2-1}}dx$ 05

பிரதியீடு $\cos^{-1}\left(\frac{1}{\sqrt{2}x}\right) = \theta$

$x = \frac{1}{\sqrt{2}} \Rightarrow \theta = 0$

$x = 1 \Rightarrow \theta = \frac{\pi}{4}$ 05

$\Rightarrow \frac{1}{\sqrt{2}x} = \cos\theta$ 05

$\sqrt{2}x = \sec\theta$

$\Rightarrow \sqrt{2}xdx = \sec\theta\tan\theta d\theta$

$I = \frac{\pi}{4} - \int_0^{\pi/4} \frac{1}{\tan\theta}\frac{1}{\sqrt{2}}\sec\theta\tan\theta d\theta$

$= \frac{\pi}{4} - \frac{1}{\sqrt{2}}\int_0^{\pi/4}\sec\theta d\theta$ 05

$= \frac{\pi}{4} - \frac{1}{\sqrt{2}}[\ln(\sec\theta + \tan\theta]_0^{\pi/4}$ 05

$= \frac{\pi}{4} - \frac{1}{\sqrt{2}}\left[\ln\left(\sqrt{2}+1\right) - \ln 1\right]$

$I = \frac{\pi}{4} - \frac{1}{\sqrt{2}}\ln\left(\sqrt{2}+1\right)$ 05

55

---

(c) $\frac{d}{dx}\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right) = \frac{1}{\sqrt{x+1}+\sqrt{x+4}} \times \left[\frac{1}{2}(x+1)^{-1/2}.1 + \frac{1}{2}(x+4)^{-1/2}.1\right]dx$ 10

$\frac{d}{dx}\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right) = \frac{1}{2\sqrt{(x+1)(x+4)}}$ 05

$\int\left\{\frac{d}{dx}\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right)\right\}dx = \int \frac{1}{2\sqrt{(x+1)(x+4)}}dx$ 05

$= \frac{1}{2}\int \frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx$

$\Rightarrow \int \frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx = 2\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right) + C$, C எதேட்சை மாறிலி

05

$\int_0^1 \frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx = \left[2\ln\left(\sqrt{x+1}+\sqrt{x+4}\right)\right]_0^1$

$$\because \int_0^1 \frac{1}{\sqrt{(x+2)(x+5)}}dx = \int_0^1 \frac{1}{\sqrt{(1-x-2)(1-x-5)}}dx$$

$$\int_0^1 \frac{1}{\sqrt{(x+1)(x+4)}}dx = 2\ln\left(\frac{\sqrt{5}+\sqrt{2}}{3}\right) \text{..........................(1)}$$ 05

$$\int_0^1 \frac{1}{\sqrt{(x+2)(x+5)}}dx = \int_0^1 \frac{1}{\sqrt{(1-x-2)(1-x-5)}}dx, \because \int_0^a f(x)dx = \int_0^a f(a-x)dx$$ 10

$$= \int_0^1 \frac{1}{\sqrt{(-x-1)(-x-4)}}dx$$

$$= \int_0^1 \frac{1}{\sqrt{(x-1)(x-4)}}dx$$ 05

$$= 2\ln\left(\frac{\sqrt{5}+\sqrt{2}}{3}\right); from(1)$$

05

50

---

16) $P \equiv (\alpha, \beta)$ எனவும் $l$ என்பது $ax+by+c=0$ இனால் தரப்படும் நேர்கோடு எனவும் கொள்வோம், $P$ இலிருந்து $l$ இற்கு வரையும் செங்குத்து தூரம் $\frac{|a\alpha+b\beta+c|}{\sqrt{a^2+b^2}}$ என நிறுவுக.

கோடு $l$ ஆனது $3x-4y+15a=0$ எனக்கொள்வோம். இங்கு $a \neq 0$ ஆகும் . $A \equiv (a, 2a)$, $B \equiv (2a, 4a)$ என்பன கோடு $l$ இற்கு ஒரே பக்கத்தில் இருக்கின்றன எனக் காட்டுக.

$l$ ஐத் தொடுவனவும், முறையே $A, B$ ஐ மையங்களாக கொண்டுள்ளனவாகவும் உள்ள $S_1, S_2$ எனும் வட்டங்களின் சமன்பாடுகளை $a$ இன் சார்பில் காண்க.

$a(\neq 0)$ இன் எல்லா பெறுமானங்களிற்கும் $S_1, S_2$ என்பன நிமிர் கோணத்தில் வெட்டும் எனக்காட்டுக.


இப்போது $a=2$ எனக் கொள்வோம். வட்டங்கள் $S_1, S_2$ என்பவற்றின் சமன்பாடுகளை எழுதுக.

கோடு $l$ இனதும் கோடு $AB$ இனதும் வெட்டுப்புள்ளி $C$ எனக் கொள்வோம். $C$ இன் ஆள்கூறுகளைக் காண்க.

$S_1, S_2$ ஆகியவற்றிற்கு $C$ இனூடாக உள்ள மற்றைய தொடலியின் சமன்பாட்டை காண்க.

$l: ax+by+c=0 \Rightarrow l$ இன் படித்திறன் $= -\frac{a}{b}$

$\therefore m_{PN} = \frac{b}{a}$ 05




$PN$ இல் $Q(x, y)$ என்க.

$PN \Rightarrow y-\beta = \frac{b}{a}(x-\alpha)$ 05

$\Rightarrow \frac{x-\alpha}{a} = \frac{y-\beta}{b} = t$ ஏன்க இங்கு $t \in \mathbb{R}$ 05

$x=\alpha+at, y=\beta+bt$ 05

$Q\equiv(\alpha+at,\beta+bt)\equiv N$ என்க

$ax+by+c=0$ இல் இட

$a(\alpha+at)+b(\beta+bt)+c=0$ 05

$t(a^2+b^2)=-(a\alpha+b\beta+c)$

$t=\frac{(a\alpha+b\beta+c)}{a^2+b^2}$ 05

$P(\alpha,\beta), N\equiv(\alpha+at,\beta+bt)$

$PN=\sqrt{(\alpha+at-\alpha)^2+(\beta+bt-\beta)^2}$ 05


$=\sqrt{(a^2+b^2)t^2}$

$=\sqrt{\frac{(a\alpha+b\beta+c)^2}{(a^2+b^2)}}$

$\Rightarrow PN=\frac{|a\alpha+b\beta+c|}{\sqrt{a^2+b^2}}$ 05

40

---




$l:3x-4y+15a=0$

$A(a,2a).B(2a,4a)$ ஐ $3x-4y+15a$ இல் இட

$(3\times a-4\times 2a+15a)(3\times 2a-4\times 4a+15a)$ 05

$=10a\times 5a$

$=50a^2>0, \because a\neq 0$

05 05

$\therefore$ கோடு $l$ இற்கு A,B என்பன ஒரே பக்கத்தில் அமையும்

$$r_1=\frac{|3\times a-4\times 2a\times 15a|}{\sqrt{9+16}}, r_2=\frac{|3\times a-4\times 4a\times 15a|}{\sqrt{9+16}}$$

05 05

$r_1=\frac{10|a|}{5}=2|a|$. 05 $r_2=\frac{5|a|}{5}=|a|$ 05

$S_1\Rightarrow(x-a)^2+(y-2a)^2=(2|a|)^2, S_2\Rightarrow(x-2a)^2+(y-4a)^2=|a|^2$

$\Rightarrow S_1\equiv x^2-y^2-2ax-4ay+a^2=0, S_2\equiv x^2+y^2-4ax-8ay+19a^2=0$

05 05 45

---

நிமிர் கோணத்தில் வெட்ட $2g_1g_2+2f_1f_2=C_1+C_2$ 05

$g_1=-a,\ f_1=-2a.c_1=a^2$

$g_2=-2a,\ f_2=-4a.c_2=19a^2$

Consider $2g_1g_2+2f_1f_2=2\times(-a)\times(-20)+2\times(-2a)\times(-4a)$

$=4a^2+16a^2$

$2g_1g_2+2f_1f_2=20a^2$ 05

Consider $C_1+C_2=a^2+19a^2$

$=20a^2$ 05

$\therefore$ எல்லா a இற்கு $2g_1g_2+2f_1f_2=C_1+C_2$

$\therefore$ எப்போதும் $S_1,S_2$ என்பன நிமிர்கோணத்தில் வெட்டும். 05 20

---

$a=2$ எனின் $S_1\Rightarrow x^2+y^2-4x-8y+4=0$

$S_2\Rightarrow x^2+y^2-8a-16y+76=0$ 05

$a=2\Rightarrow A\equiv(2,4), B\equiv(4,8)$

$AB\Rightarrow y-4=\left(\frac{8-4}{4-2}\right)(x-2)$ 05

$\Rightarrow 2x-y=0\Rightarrow y=2x$ 05

$l:3x-4y+30=0$

$AB\Rightarrow y=2x \quad \Rightarrow C\equiv(6,12)$ 05

$C \equiv (6,12)$ இல் இருந்து $S_1, S_2$ என்பவற்றிற்கு வரையும் தொடலியின் படித்திறன் $m$ என்க

$\therefore$ தொடலியின் சமன்பாடு,

$y-12=m(x-6)$ 05

$mx-y+(12-6m)=0$

$A \equiv (2,4), r_1=4$

$AM = r_1$

$\Rightarrow \dfrac{|m\times 2-4+(12-6m)|}{\sqrt{m^2+(-1)^2}}=4$ 05

$|8-4m| = 4\sqrt{m^2+1}$

$\Rightarrow |2-m| = \sqrt{m^2+1}$

$\Rightarrow (2-m)^2 = m^2+1$

$3=4m \Rightarrow m=\dfrac{3}{4}$ 05

இது தரப்பட்ட தொடலியின் படித்திறன்

$\therefore$ மற்றைய தொடலி y-அச்சிற்கு சமாந்தரமாகும். 05

மற்றைய தொடலியின் சமன்பாடு x=6 05 20

---

17)

a) $\sin(A+B), \cos(A+B)$ என்பவற்றின் விரிவுகளை $\sin A, \cos A, \sin B, \cos B$ ஆகியவற்றில் எழுதுக. **இதிலிருந்து**

i) $\sin 2\theta = 2\sin\theta\cos\theta$

ii) $\cos 2\theta = 1-2\sin^2\theta$

iii) $\sin 3\theta = 3\sin\theta - 4\sin^3\theta$ என்பவற்றைக் காட்டுக.

$\cos 3\theta = 4\cos^3\theta - 3\cos\theta$ என்பதை **உய்த்தறிக**.

$\sin 3\theta, \cos 3\theta$ ஆகியவற்றின் முடிவுகளைப் பயன்படுத்தி $\sin 3x+\sin x+\cos 3x-\cos x=0$ ஐத் தீர்க்க.

b) வழக்கமான குறிப்பீட்டில் முக்கோணி ABC இல் சைன் நெறி, கோசைன் நெறியைக் கூறுக. முக்கோணி ABC இல் வழக்கமான குறிப்பீட்டுடன் $\cos(A-B)=\dfrac{61}{64}$ எனின் $2\sin(A+B)\cos(A-B)=\sin 2A+\sin 2B$ எனும் முடிவையும், சைன் நெறியையும் பயன்படுத்தி $a\cos A+b\cos B=\dfrac{61}{64}c$ எனக்காட்டுக.

**இதிலிருந்து** $a=2, b=3$ எனின் $c=4$ எனக்காட்டுக.

c) $\sin^{-1}\left(e^{-x}\sqrt{e^{2x}-1}\right)+\cos^{-1}(e^{-x})=\dfrac{\pi}{2}$ எனும் சமன்பாட்டை தீர்க்க.

a) $\sin(A+B)=\sin A\cos B+\cos A\sin B,\quad \cos(A+B)=\cos A\cos B-\sin A\sin B$

05 05 **10**

---

i. $\sin 2\theta=\sin(\theta+\theta)$

$=\sin\theta\cos\theta+\cos\theta\sin\theta$ 05

$\sin 2\theta=2\sin\theta\cos\theta$ **05**

---

ii. $\cos 2\theta=\cos(\theta+\theta)$

$=\cos\theta\cos\theta-\sin\theta\sin\theta$ 05

$=\cos^2\theta-\sin^2\theta$

$=-(1-\sin^2\theta)-\sin^2\theta$ 05

$\Rightarrow\cos 2\theta=1-2\sin^2\theta$ **10**

---

iii. $\sin 3\theta=\sin(\theta+2\theta)$

$=\sin\theta\cos 2\theta+\cos\theta\sin 2\theta$ 05

$=\sin\theta(1-2\sin^2\theta)+\cos\theta.2\sin\theta\cos\theta$ 05

$=\sin\theta-2\sin^2\theta+2\sin\theta(1-\sin^2\theta)$

$\sin 3\theta=3\sin\theta-4\sin^3\theta$ 05 **15**

---

$\theta\to\frac{\pi}{2}-\theta\Rightarrow\sin 3\left(\frac{\pi}{2}-\theta\right)=3\sin\left(\frac{\pi}{2}-\theta\right)-4\sin^3\left(\frac{\pi}{2}-\theta\right)$ 05

05

$\sin\left(\frac{3\pi}{2}-3\theta\right)=3\cos\theta-4\cos^3\theta$

$\Rightarrow-\cos 3\theta=3\cos\theta-4\cos^3\theta$ 05

$\Rightarrow\cos 3\theta=4\cos^3\theta-3\cos\theta$ 05 **20**

---

$\sin 3x+\sin x+\cos 3x-\cos x=0$

$\Rightarrow(3\sin x-4\sin^3 x)+\sin x+(4\cos^3 x-3\cos x)-\cos x=0$ 05

$4(\sin x-\sin^3 x+\cos^3 x-\cos x)=0$

$\Rightarrow\left(\sin x-\cos x\right)-\left(\sin^3 x-\cos^3 x\right)=0$

$(\sin x-\cos x)-(\sin x-\cos x)(\sin^2 x+\sin x\cos x+\cos^2 x)=0$ 05

$$(\sin x-\cos x)-(\sin x-\cos x)(1+\frac{1}{2}\sin 2x)=0$$

$$(\sin x-\cos x)\left[1-(1-\frac{1}{2}\sin 2x)\right]=0$$

$$\frac{1}{2}\sin 2x(\sin x-\cos x)=0$$ 05

$\Rightarrow \sin 2x=0$ or $\sin x-\cos x=0$

$\sin 2x=\sin 0$ $\qquad$ $\sin x=\cos x$

$\tan x=1;$ $\qquad$ $\because \cos x\neq 0$


$2x=n\pi+(-1)^n.0$ 05 $\qquad$ $\tan x=\tan\frac{\pi}{4}$ 05

$x=n\frac{\pi}{2};n\in\mathbb{Z}$ $\qquad$ $x=m\pi+\frac{\pi}{4};m\in\mathbb{Z}$

25

---

b)




*Sin−Rule* $\qquad \frac{a}{\sin A}=\frac{b}{\sin B}=\frac{c}{\cos C}$ 05

*Cos−Rule* $\qquad a^2=b^2+c^2-2bc\cos A$ 05

10

---

$$\cos(A-B)=\frac{61}{64}$$

$$\Rightarrow 2\sin(A+B)\cos(A-B)=\frac{61}{32}\sin(A+B)$$ 05

$\sin 2A+\sin 2B=\frac{61}{32}\sin C$ 05 $\qquad$ $\because A+B+C=\pi$

$\Rightarrow A+B=\pi-C$

$$2\sin A\cos A+2\sin B\cos B=\frac{61}{32}\sin C$$ 05

$$2ka\cos A + 2kb\cos B = \frac{61}{64}\times kc$$ 05

$\because$ Sin– *Rule* $\quad \frac{a}{\sin A} = \frac{b}{\sin B} = \frac{c}{\sin C} = \frac{1}{k}$ என்க 05

20

---

$$\Rightarrow a\cos A + b\cos B = \frac{61}{64}c$$

$a = 2, b = 3$ எனின்

$$\Rightarrow a\frac{b^2+c^2-a^2}{2bc} + b\frac{\left(a^2+c^2-b^2\right)}{2ac} = \frac{61}{64}c$$ 05 $\because$ Cos– *Rule*

$$\frac{2(9+c^2-4)}{2\times 3c} + \frac{3\left(4+c^2-9\right)}{2\times 2c} = \frac{61}{64}c$$ 05

$$4(5+c^2)+9(c^2-5) = \frac{3\times 61c^2}{16}$$

$$\Rightarrow 64(5+c^2)+144(c^2-5) = 183c^2$$

$$\Rightarrow c^2 = 16$$

$\Rightarrow c = 4; \because c > 0$ 05


15

---

c) $\sin^{-1}\left(e^{-x}\sqrt{e^x-1}\right) = \alpha$ என்க. இங்கு $e^{-x}\sqrt{e^x-1} > 0$

05

$$\Rightarrow 0 < \alpha < \frac{\pi}{4}$$




05

$$e^{-x}\sqrt{e^{2x}-1} = \sin\alpha$$

$$\Rightarrow \sin\alpha = \frac{\sqrt{e^{2x}-1}}{e^x}$$

$$\cos\alpha = \frac{1}{e^x} = e^{-x}$$

$\Rightarrow \alpha = \cos^{-1}e^x$ 05

$$\therefore \sin^{-1}\left(e^{-x}\sqrt{e^{2x}-1}\right) + \cos^{-1}\left(e^x\right) = \frac{\pi}{2}$$

$$\Rightarrow \alpha + \alpha = \frac{\pi}{2}$$

$\Rightarrow 2\alpha = \frac{\pi}{2}$ 05

$$\Rightarrow \alpha = \frac{\pi}{4}$$

20

---


Mora E Tamils
Faculty of Engineering
University of Moratuwa

**மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள்**
**நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 13வது**

# முன்னோடிப் பரீட்சை 2022

# 10(II) - இணைந்தகணிதம் II


## விடைகள் (புள்ளியிடும் திட்டம்)





Prepared By
**B.Raveendran** *B.Sc.*

## பகுதி $A$

1. உருவிற் காணப்படுகின்றவாறு முறையே $2m, m$ திணிவுள்ள $A, B$ எனும் இரு துணிக்கைகள் ஒரு ஒப்பமான கிடை மேசை மீது வைக்கப்பட்டு ஒரே நேர்கோட்டில் ஆனால் எதிர்த் திசைகளில் இயங்கிக்கொண்டு நேரடியாக மோதுகின்றன. மோதுகைக்குச் சற்று முன்னர் $A, B$ ஆகியவற்றின் வேகங்கள் முறையே $3u, 2u$ ஆகும். மோதுகையின் பின்னர் $B$ யானது சுவரை நோக்கி $8u/3$ எனும் வேகத்துடன் இயங்குகின்றது எனின் துணிக்கைகளுக்கு இடையிலான மீளமைவுக் குணகத்தைக் காண்க. தொடரும் இயக்கத்தில் $B$ யானது சுவருடன் மோதும் போது துணிக்கை மீது வழங்கப்படும் கணத்தாக்கு $\frac{14mu}{3}$ எனின் $B$ யிற்கும் சுவருக்கும் இடையிலான மீளமைவுக் குணகம் $3/4$ எனக் காட்டுக.




தொகுதிக்கு $I = \Delta(mv)$





$$\rightarrow 0 = \left(m.\frac{8u}{3} + 2mv\right) - \left(2m.3u - m.2u\right) \quad (5)$$

$$v = \frac{2u}{3} \quad (5)$$

நியூட்டனின் பரிசோதனை விதிப்படி

$$\frac{8u}{3} - \frac{2u}{3} = e\left(2u + 3u\right) \quad \Rightarrow e = 2/5 \quad (5)$$

$B$ யிற்கு $I = \Delta mv$





$$\leftarrow \frac{14}{3}mu = mv' - \left(-\frac{8mu}{3}\right) \quad \Rightarrow v' = 2u \quad (5)$$

நியூட்டனின் பரிசோதனை விதிப்படி

$$v' = e'.\frac{8u}{3} \quad \Rightarrow 2u = e'.\frac{8u}{3} \quad \Rightarrow e' = 3/4 \quad (5)$$

25


2. படத்தில் காட்டியவாறு $h$ உயரமான கூடைப்பந்தாட்ட வீரர் ஒருவர் தன்னிலிருந்து $d$ தூரத்தில் $H$ உயரத்திலுள்ள கூடையினுள் பந்து விழுமாறு கிடையுடன் $\theta = \pi/4$ சாய்வில் $v$ கதியுடன் பந்து ஒன்றை எறிகின்றார். பந்தானது சரியாக கூடையினுள் விழுகின்றது எனின் $v^2 = \frac{gd^2}{d+h-H}$ எனக்காட்டுக. **இதிலிருந்து** $H < d + h$ எனக்காட்டுக.




$$s = ut + \frac{1}{2}at^2$$

$$\rightarrow d = v\cos\left(\frac{\pi}{4}\right)t \quad (5) \quad \Rightarrow t = \frac{\sqrt{2}\,d}{v}$$

$$\uparrow H - h = v\sin\left(\frac{\pi}{4}\right)t - \frac{1}{2}gt^2 \quad (5)$$




$$H - h = v\frac{1}{\sqrt{2}}\frac{\sqrt{2}d}{v} - \frac{1}{2}g\frac{2d^2}{v^2}$$


$$v^2 = \frac{gd^2}{d+h-H} \quad (5)$$

$$v^2 > 0, gd^2 > 0 \Rightarrow d + h - H > 0 \quad (5)$$

$$(5) \quad \therefore H < d + h$$

25

**3.** திணிவு $m$ ஐ உடைய ஒரு துணிக்கை $P$ ஓர் ஒப்பமான கிடைமேசை மீது வைக்கப்பட்டு $A, B$ எனும் இரு நிலைப்படுத்தப்பட்ட சிறிய ஒப்பமான கப்பிகளுக்கு மேலாகச் செல்லும் ஒரு இலேசான நீளா இழையினால் ஓர் இலேசான கப்பி $C$ யுடன் இணைக்கப்பட்டுள்ளது. முறையே $m, \lambda m (\lambda > 1)$ திணிவுள்ள $Q, R$ எனும் இரு துணிக்கைகள் கப்பி $C$ யின் மேலாகச் செல்லும் ஓர் இலேசான நீட்டமுடியாத வேறோர் இழையினால் படத்தில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளன. துணிக்கைகளும் இழைகளும் ஒரே நிலைக்குத்துத் தளத்தில் இருக்கின்றன. இழைகள் இறுக்கமாக இருக்க தொகுதி ஓய்விலிருந்து விடுவிக்கப்படுகின்றது. $Q, R$ இனை இணைக்கும் இழையில் உள்ள இழுவையைத் துணிவதற்குப் போதுமான சமன்பாடுகளை எழுதுக.




$a_{P,E} = f$ ←

$a_{Q,C} = F$ ↑ $\quad a_{R,C} = F$ ↓


$F = ma$ இனைப் பிரயோகிக்க

(P) $\leftarrow T_1 = mf$ (5)

(C) $\downarrow 2T_2 - T_1 = 0$ (5)

(Q) $\uparrow T_2 - mg = m(F - f)$ (5)

(R) $\downarrow \lambda mg - T_2 = \lambda m(F + f)$ (5)




(5)

25


**4.** $M\,kg$ திணிவும் $P\,kW$ எனும் மாறா வலுவையும் உடைய கார் ஒன்று கிடையுடன் $\alpha$ சாய்வில் உள்ள பாதை ஒன்றில் $\lambda Mg$ எனும் மாறாத்தடைவிசைக்கு எதிராக $\mu g$ எனும் சீரான ஆர்முடுகலுடன் மேல்நோக்கிச் செல்லும் போது அதன் கதி $v_1$ எனவும் $\mu g$ எனும் ஆர்முடுகலுடன் கீழ்நோக்கிச் செல்லும்போது அதன் கதி $v_2$ எனவும் தரப்படின் $\dfrac{v_1}{v_2} = \dfrac{\lambda + \mu - \sin\alpha}{\lambda + \mu + \sin\alpha}$ எனக்காட்டுக.

மேல் நோக்கிய பிரயாணத்திற்கு

$P = Fv \Rightarrow 1000P = F_1 v_1 \Rightarrow F_1 = \dfrac{1000P}{v_1}$ (5)

$\nearrow F = ma \Rightarrow \dfrac{1000P}{v_1} - \lambda Mg - Mg\sin\alpha = M\mu g$ (5)

$$v_1 = \frac{1000P}{Mg(\mu + \lambda + \sin\alpha)}$$





கீழ் நோக்கிய பிரயாணத்திற்கு

$P = Fv \Rightarrow F_2 = \dfrac{1000P}{v_2}$ (5)

$\swarrow F = ma \Rightarrow \dfrac{1000P}{v_2} + Mg\sin\alpha - \lambda Mg = M\mu g$ (5)

$$v_2 = \frac{1000P}{Mg(\lambda + \mu - \sin\alpha)}$$

$$\therefore \frac{v_1}{v_2} = \frac{\lambda + \mu - \sin\alpha}{\lambda + \mu + \sin\alpha}$$ (5)





25



[பக். 3 ஐப் பார்க்க

**5.** $O$ இனை மையமாகவும் $R$ இனை ஆரையாகவும் உடைய ஒப்பமான அரைக்கோளம் ஒன்று அதன் தளமுகம் ஒரு கிடைத்தளம் மீது இருக்குமாறு நிலைப்படுத்தப்பட்டுள்ளது. $m$ திணிவுள்ள துணிக்கை $P$ யானது $R$ நீளமான ஒரு இலேசான நீட்டமுடியாத இழை ஒன்றின் ஒரு முனைக்கு இணைக்கப்பட்டு இழையின் மறுமுனை $O$ இற்கு நிலைக்குத்தாக மேலே $2h$ உயரத்தில் உள்ள $O'$ எனும் நிலைத்த புள்ளிக்கு இணைக்கப்பட்டுள்ளது. $P$ யானது அரைக்கோள மேற்பரப்பின் மீது ஓர் கிடை வட்டப்பாதையில் $\omega$ எனும் கோண வேகத்துடன் உருவில் காட்டியவாறு இயங்குகின்றது. துணிக்கையானது அரைக்கோள மேற்பரப்பை விட்டு வெளியேறும் தறுவாயில் உள்ளது எனின் $\omega = \sqrt{\dfrac{g}{h}}$ எனவும் இழையில் உள்ள இழுவை $\dfrac{mgR}{h}$ எனவும் காட்டுக.




மேற்பரப்பை விட்டு வெளியேறும் தறுவாயில் இருப்பதால் $N = 0$ (5)

$F = ma$ இனைப் பிரயோகிக்க


$\uparrow \; T\cos\theta = mg$

$T = \dfrac{mgR}{h}$ (5)

$\rightarrow T\sin\theta = mR\sin\theta.\omega^2$ (5)

$\dfrac{mgR}{h}.\sin\theta = mR\sin\theta.\omega^2$

$\omega^2 = \dfrac{g}{h} \Rightarrow \omega = \sqrt{\dfrac{g}{h}}$ (5)




$\cos\theta = \dfrac{h}{R}$

25

**6.** வழக்கமான குறிப்பீட்டில், ஓர் உற்பத்தி $O$ வைக்குறித்து $A, B, C$ எனும் மூன்று புள்ளிகளின் தானக்காவிகள் முறையே $3\mathbf{i}+6\mathbf{j},\ 6\mathbf{i}+3\mathbf{j},\ \mathbf{i}+2\mathbf{j}$ ஆகும். $P$ ஆனது $AB$ மீது $AB \perp CP$ ஆகுமாறு உள்ள புள்ளி எனின் $P$ யின் தானக்காவியைக் கண்டு $P$ ஆனது $AB$ இனை $1:2$ எனும் விகிதத்தில் பிரிக்கின்றது எனக் காட்டுக.

$\overrightarrow{OP} = \alpha\mathbf{i} + \beta\mathbf{j}$ என்க.

$\overrightarrow{AP} = (\alpha\mathbf{i}+\beta\mathbf{j}) - (3\mathbf{i}+6\mathbf{j}) = (\alpha-3)\mathbf{i} + (\beta-6)\mathbf{j}$

$\overrightarrow{AB} = (6\mathbf{i}+3\mathbf{j}) - (3\mathbf{i}+6\mathbf{j}) = 3(\mathbf{i}-\mathbf{j})$

$\overrightarrow{CP} = (\alpha\mathbf{i}+\beta\mathbf{j}) - (\mathbf{i}+2\mathbf{j}) = (\alpha-1)\mathbf{i} + (\beta-2)\mathbf{j}$ (5)

$AB \perp CP \Rightarrow \overrightarrow{AB}.\overrightarrow{CP} = 0$

$3(\mathbf{i}-\mathbf{j}).\left((\alpha-1)\mathbf{i}+(\beta-2)\mathbf{j}\right) = 0 \Rightarrow \alpha - \beta = -1$ ---------① (5)

$P$ யானது $AB$ மீது இருப்பதால் $\overrightarrow{AP} = \lambda\overrightarrow{AB}$

$(\alpha-3)\mathbf{i} + (\beta-6)\mathbf{j} = 3\lambda(\mathbf{i}-\mathbf{j}) \Rightarrow (\alpha-3-3\lambda)\mathbf{i} + (\beta-6+3\lambda)\mathbf{j} = 0$ (5)

$\alpha - 3\lambda - 3 = 0$ -----------② $\quad \beta + 3\lambda - 6 = 0$ ---------------③


②+③ $\Rightarrow \alpha + \beta = 9$ --------------④

①, ④ $\Rightarrow \alpha = 4,\ \beta = 5$ $\quad \therefore \overrightarrow{OP} \equiv 4\mathbf{i} + 5\mathbf{j}$ (5)

② $\Rightarrow \lambda = \dfrac{1}{3}$ $\quad \therefore AP : PB = 1:2$ (5)

25

**7.** $AB$ ஆனது $4a$ நீளமும் $2w$ நிறையும் உடைய ஒரு சீரான கோலாகும். $AB$ ஆனது $A$ யில் பிணைக்கப்பட்டு முனை $B$ யிற்கு $w$ நிறை இணைக்கப்பட்டு கோலின் மீது உள்ள $C$ எனும் புள்ளிக்கு இணைக்கப்பட்ட ஒரு இலேசான நீட்டமுடியாத இழையினால் படத்தில் காட்டியவாறு சமனிலையில் பேணப்படுகின்றது. சமனிலையில் $AB$ கிடையாகவும் இழை கோலுடன் அமைக்கும் கோணம் $\alpha$ ஆகவும் உள்ளது. $A$ யில் உள்ள மறுதாக்கத்தின் கிடை, நிலைக்குத்துக் கூறுகள் முறையே $2w, \frac{w}{3}$ எனத்தரப்படின் $\alpha$ இனைக் கண்டு இழையில் உள்ள இழுவை $T = \frac{10w}{3}$ எனவும் $AC = 3a$ எனவும் காட்டுக.




கோலின் சமனிலைக்கு

$\uparrow \; T\sin\alpha + \frac{w}{3} - 2w - w = 0 \qquad \Rightarrow T\sin\alpha = \frac{8w}{3}$ ------① (5)

$\rightarrow \; 2w - T\cos\alpha = 0 \qquad \Rightarrow T\cos\alpha = 2w$ -----------② (5)


$\frac{①}{②} \Rightarrow \tan\alpha = \frac{4}{3} \quad \Rightarrow \alpha = \tan^{-1}\left(\frac{4}{3}\right)$


$① \Rightarrow T.\frac{4}{5} = \frac{8w}{3} \quad \Rightarrow T = \frac{10w}{3}$ (5)

$A \circlearrowleft \; 2a \times 2w - T.AC\sin\alpha + 4aw = 0$ (5)

$8aw = \frac{10w}{3} \times AC \times \frac{4}{5}$


$AC = 3a$ (5)




25

**8.** $2a$ நீளமும் $w$ நிறையும் உடைய ஒரு சீரான கோல் $AB$ யின் ஒரு முனை $A$ யிற்கு இலேசான வளையம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இவ்வளையமானது கரடான கிடைக்கம்பி ஒன்றில் கோர்க்கப்பட்டு $B$ யில் தாக்கும் ஒரு கிடை விசை $P$ யினால் உருவில் காட்டியவாறு சமனிலையில் பேணப்படுகின்றது. கம்பிக்கும் வளையத்திற்கும் இடையிலான உராய்வுக் குணகம் $\mu$ ஆகும். சமனிலையில் கோல் நிலைக்குத்துடன் அமைக்கும் கோணம் $\theta$ எனின் $\theta \leq \tan^{-1}(2\mu)$ எனக் காட்டுக.




கோலின் சமனிலைக்கு

$\uparrow \; R = w$

$\rightarrow \; F = P$ (5)

$A \circlearrowleft \; w \times a\sin\theta - P \times 2a\cos\theta = 0$ (5)


$P = \frac{w}{2}\tan\theta = F$

சமனிலைக்கு $\frac{F}{R} \leq \mu$

$\frac{\frac{w}{2}\tan\theta}{w} \leq \mu$ (5)

$\tan\theta \leq 2\mu \Rightarrow \quad \theta \leq \tan^{-1}(2\mu)$

(5)




25

**9.** $A, B$ ஆகியன ஒரு மாதிரிவெளி $\Omega$ இன் இரு நிகழ்வுகளெனக் கொள்வோம் வழக்கமான குறிப்பீட்டில் $P(A)=\frac{1}{3},\ P(B\,|\,A)=\frac{3}{5},\ P(A'\cap B)=\frac{2}{5}$ எனத்தரப்படின் $P(A\cap B),\ P(B),\ P(A\cup B)$ ஆகியவற்றைக் காண்க. மேலும் $A, B$ ஆகியன சாரா நிகழ்வுகள் எனக் காட்டுக. இங்கு $A'$ ஆனது $A$ இன் நிரப்பு நிகழ்வைக் குறிக்கின்றது.

$$P(B\,|\,A)=\frac{P(B\cap A)}{P(A)}=\frac{3}{5}$$

$$P(A\cap B)=\frac{3}{5}\times\frac{1}{3}=\frac{1}{5} \quad (5)$$

$$P(A'\cap B)=P(B)-P(A\cap B)=\frac{2}{5}$$

$$P(B)=\frac{1}{5}+\frac{2}{5}=\frac{3}{5} \quad (5)$$

$$P(A\cup B)=P(A)+P(B)-P(A\cap B)$$

$$=\frac{1}{3}+\frac{3}{5}-\frac{1}{5}=\frac{11}{15} \quad (5)$$

$$P(A).\,P(B)=\frac{1}{3}\times\frac{3}{5}=\frac{1}{5}=P(A\cap B) \quad (5)$$

$\therefore A, B$ சாரா நிகழ்ச்சிகள் ஆகும். (5)

**25**

**10.** $X=\{x_1, x_2, ......, x_{10}\}$ என்பது 10 மாணவர்களுக்கு பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகள் ஆகும். $y_i=10x_i+5$ எனும் உருமாற்ற சமன்பாட்டைப் பயன்படுத்தி $Y=\{y_1, y_2, ......, y_{10}\}$ எனும் புள்ளிகள் பெறப்படுகின்றன. $Y$ இனது இடை, நியம விலகல் என்பன முறையே 85, 5 எனக் கணிக்கப்பட்டது. மீள்பரிசோதனையில் $x_3=3$ ஆனது தவறுதலாக $x_3=8$ எனப் பதியப்பட்டது கண்டறியப்பட்டு திருத்தப்படுகின்றது. திருத்திய பின்னர் $Y$ இனது இடையைக் கண்டு, நியமவிலகல் $5\sqrt{10}$ எனக் காட்டுக.

பிழையான $y_i=10\times 8+5=85$

சரியான $y_i=10\times 3+5=35$ (5)

சரியான $\sum_{i=1}^{10} y_i=10\times 85-85+35=800$ $\quad \therefore \bar{y}=\frac{800}{10}=80$ (5)

$$\frac{\sum_{i=1}^{10} y_i^2}{10}-\bar{y}^2=\sigma_y^2$$

பிழையான $\sum_{i=1}^{10} y_i^2=10(5^2+85^2)=72,500$ (5)

திருத்திய $\sum_{i=1}^{10} y_i^2=72500-85^2+35^2=66,500$ (5)

$\sigma_y^2=\frac{66500}{10}-80^2=250$ (5) $\quad \therefore \sigma_y=5\sqrt{10}$

**25**



SLTC
Research University

# Inspire. Innovate. Engineer.

## Undergraduate Degrees

**Bachelor of Science (Hons) in Engineering in Civil Engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Information and communication engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Power Systems**

**Bachelor of Science (Hons) in Engineering in Telecommunication Engineering**

**Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Engineering Management**

**Bachelor of Science (Hons) in Engineering in Mechatronics Engineering**

RMIT UNIVERSITY

### RMIT University
### RMIT Australia

- Bachelor of Engineering (Hons) Mechanical Engineering
- Bachelor of Engineering (Hons) Civil & Infrastructure
- Bachelor of Engineering (Hons) Automotive Engineering
- Bachelor of Engineering (Hons) Aerospace Engineering
- Bachelor of Engineering (Hons) Advanced Manufacturing & Mechatronics

### RMIT Vietnam

- Bachelor of Engineering (Hons) Electrical & Electronic Engineering
- Bachelor of Engineering (Hons) Robotics and Mechatronics Engineering

### DEAKIN University, Australia

- Bachelor of Civil Engineering (Hons)
- Bachelor of Electrical & Electronic Engineering
- Bachelor of Mechatronics Engineering

Lancaster University

### Lancaster University,UK

- Bachelor of Engineering (Hons)

THE UNIVERSITY OF AUCKLAND NEW ZEALAND

### University of Auckland, New Zealand

- Bachelor of Engineering (Hons)

Deakin University CRICOS Provider Code 00113B | RMIT CRICOS Provider Code 00122A

School of Engineering

www.sltc.ac.lk

0112 100 500


WE PROVIDE BEST QUALITY PRODUCTS
Northway
Family Mart
Save Money. Live Better.
Uppumadam Junction, K.K.S Road,

பகுதி ***B***

**11.** ($a$) ஓர் நேர் வீதியில் உள்ள $A, B$ எனும் இரு வீதி சமிக்ஞைகளுக்கு இடையிலான தூரம் $d$ ஆகும். ஒரு காரானது $A$ யிலிருந்து ஓய்விலிருந்து புறப்பட்டு $f$ எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்கி $v$ எனும் கதியை அடைந்து அக்கதியுடன் $T$ நேரம் பயணித்து பின்னர் $2f$ எனும் அமர்முடுகலுடன் $B$ யில் ஓய்வுக்கு வருகின்றது. காரின் இயக்கத்திற்கான வேக – நேர வரைபை வரைந்து $T = \frac{d}{v} - \frac{3v}{4f}$ எனக் காட்டுக.

காரானது $A$ யிலிருந்து புறப்பட்டு $t_0\left(< \frac{v}{f}\right)$ நேரத்தின் பின்னர் மோட்டார் சைக்கிள் ஒன்று $A$ யிலிருந்து ஓய்விலிருந்து புறப்பட்டு $a$ எனும் சீரான ஆர்முடுகலுடன் $B$ இனை நோக்கி பயணிக்கின்றது. மோட்டார் சைக்கிளானது $C$ எனும் புள்ளியில் காரை கடக்கின்றது. $AC = D(< d)$ எனவும் மோட்டார் சைக்கிள் காரை கடக்கும்போது காரின் கதி $v$ எனவும் தரப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளின் இயக்கத்திற்கான வேக – நேர வரைபை அதே படத்தில் வரைந்து $t_0 = \frac{D}{v} + \frac{v}{2f} - \left(\frac{2D}{a}\right)^{\frac{1}{2}}$ எனக் காட்டுக.

காரின் இயக்கத்திற்கு


$$f = \frac{v}{t_1} \Rightarrow t_1 = \frac{v}{f} \quad (5)$$

$$2f = \frac{v}{t_2} \Rightarrow t_2 = \frac{v}{2f} \quad (5)$$

$$d = \frac{1}{2} \times t_1 \times v + vT + \frac{1}{2} \times v \times t_2 \quad (10)$$

$$d = \frac{v^2}{2f} + vT + \frac{v^2}{4f} \quad (5)$$

$$T = \frac{d}{v} - \frac{3v}{4f}$$




மோட்டார் சைக்கிளின் இயக்கத்திற்கு

$$a = \frac{v_1}{t_3} \Rightarrow v_1 = at_3 \quad (5)$$

$$D = \frac{1}{2} \times t_3 \times v_1$$

$$D = \frac{1}{2} \times t_3 \times at_3 \Rightarrow t_3 = \sqrt{\frac{2D}{a}} \quad (5)$$

$t = t_0 + t_3$ இல் கார் சென்ற தூரம் $= D$

$$\frac{1}{2} \times v \times t_1 + v(t_0 + t_3 - t_1) = D \quad (10)$$


$$\frac{v^2}{2f} + v\left(t_0 + \sqrt{\frac{2D}{a}} - \frac{v}{f}\right) = D \qquad t_0 = \frac{D}{v} + \frac{v}{2f} - \left(\frac{2D}{a}\right)^{1/2} \quad (5)$$

70



[பக். 7 ஐப் பார்க்க

(b) $b$ அகலமானதும் சமாந்தரமான கரைகளையும் உடைய ஆறு ஒன்று சீரான வேகம் **u** உடன் படத்தில் காட்டப்பட்டவாறு பாய்கின்றது. $A, C$ என்பன ஆற்றின் ஒரு கரையிலும் $B$ ஆனது ஆற்றின் மறுகரையிலும் $\overrightarrow{AB}$ ஆனது **u** உடன் கூர்ங்கோணம் $\alpha$ உம் $BC \perp AC$ ஆகுமாறும் உள்ளது. நீர் தொடர்பாக $\sqrt{2}u$ கதியுடன் நீந்தக்கூடிய சிறுவன் ஒருவன் $A$ யிலிருந்து $B$ யிற்கும் பின்னர் $B$ யிலிருந்து $C$ யிற்கும் நீந்துகிறான். இங்கு $|\mathbf{u}| = u$ ஆகும். $A$ யிலிருந்து $B$ யிற்கும் பின்னர் $B$ யிலிருந்து $C$ யிற்குமான இயக்கங்களுக்கான வேக முக்கோணிகளை ஒரே படத்தில் பரும்படியாக வரைக. **இதிலிருந்து** $A$ யிலிருந்து $B$ யிற்கு செல்லும்போது நீர் தொடர்பாக சிறுவனின் வேகம் $\overrightarrow{AB}$ உடன் $\theta$ கோணம் அமைக்கின்றது எனின் $\sin\theta = \frac{1}{\sqrt{2}}\sin\alpha$ எனக் காட்டுக. மேலும் $B$ யிலிருந்து $C$ யிற்குச் செல்லும்போது நீர் தொடர்பாக சிறுவனின் வேகம் $\overrightarrow{BC}$ உடன் $\pi/4$ கோணம் அமைக்கின்றது எனக் காட்டுக. சிறுவன் $A$ யிலிருந்து $B$ யிற்கு நீந்த எடுத்த நேரம் $T_1$ எனவும் $B$ யிலிருந்து $C$ யிற்கு நீந்த எடுத்த நேரம் $T_2$ எனவும் கொள்க. $T_2 = 2T_1 \sin 2\alpha$ எனின் $\cos\theta = \frac{3}{\sqrt{2}}\cos\alpha$ எனக் காட்டுக. $\sin\theta, \cos\theta$ ஆகியவற்றுக்கான மேற்குறித்த கோவைகளைப் பயன்படுத்தி $\alpha = \cos^{-1}\left(\frac{1}{2\sqrt{2}}\right)$ என உய்த்தறிக.




ஆறு $-R$ சிறுவன் $-B$ பூமி $-E$

$A \to B : V_{B,E} = V_{B,R} + V_{R,E}$


$\measuredangle w_1 = \sqrt{2}u + \to u$ (5)

$\overrightarrow{PR} = \overrightarrow{PQ} + \overrightarrow{QR}$

$B \to C : V_{B,E} = V_{B,R} + V_{R,E}$

$\downarrow w_2 = \sqrt{2}u + \to u$ (5)

$\overrightarrow{PS} = \overrightarrow{PQ} + \overrightarrow{QS}$




$\Delta PQR$ இல் சைன் விதி $\Rightarrow$

$$\frac{\sqrt{2}u}{\sin\alpha} = \frac{u}{\sin\theta} \Rightarrow \sin\theta = \frac{1}{\sqrt{2}}\sin\alpha \quad (10)$$

$$\sin\beta = \frac{1}{\sqrt{2}} \Rightarrow \beta = \pi/4 \quad (5)$$

$\therefore$ $B$ யிலிருந்து $C$ யிற்குச் செல்லும்போது நீர் தொடர்பாக சிறுவனின் வேகம் $(\overrightarrow{QS})$ $\overrightarrow{BC}$ உடன் $\pi/4$ கோணம் அமைக்கின்றது.

$$T_1 = \frac{AB}{w_1} = \frac{b/\sin\alpha \ (5)}{u\cos\alpha + \sqrt{2}u\cos\theta} \quad (5)$$

$$T_2 = \frac{BC}{w_2} = \frac{b}{u} \quad (5)$$



[பக். 8 ஐப் பார்க்க

$$T_2 = 2\sin 2\alpha T_1$$

$$\frac{b}{u} = 2\sin 2\alpha \frac{b}{\sin\alpha\left(u\cos\alpha + \sqrt{2}u\cos\theta\right)} \quad (5)$$

$$4\cos\alpha = \cos\alpha + \sqrt{2}\cos\theta$$

$$\cos\theta = \frac{3}{\sqrt{2}}\cos\alpha \quad (5)$$


$$\sin^2\theta + \cos^2\theta = 1 \quad \Rightarrow \quad \left(\frac{1}{\sqrt{2}}\sin\alpha\right)^2 + \left(\frac{3}{\sqrt{2}}\cos\alpha\right)^2 = 1 \quad (5)$$

$$\frac{1}{2}\left(1-\cos^2\alpha\right) + \frac{9}{2}\cos^2\alpha = 1$$

$$\cos\alpha = \frac{1}{2\sqrt{2}} \quad \Rightarrow \quad \alpha = \cos^{-1}\left(\frac{1}{2\sqrt{2}}\right) \quad (5)$$

**80**

**12. (a)** உருவில் $ABC$ ஆனது $B\hat{A}C = \frac{\pi}{2}$ ஆகவும் $AB$ ஐக் கொண்டுள்ள முகம் ஓர் ஒப்பமான கிடைமேசை மீதும் இருக்குமாறு வைக்கப்பட்ட திணிவு $M$ ஐ உடைய ஓர் ஒப்பமான சீரான ஆப்பின் புவியீர்ப்பு மையத்தினூடான நிலைக்குத்து குறுக்குவெட்டாகும். $DE$ ஆனது ஆப்பினுள் வெட்டப்பட்ட ஒப்பமான துவாரம் எனவும் $DE, BC$ ஆகியன கிடையுடன் $\alpha$ கோணம் அமைக்கின்றன எனவும் தரப்பட்டுள்ளது. முறையே $m, 2m$ திணிவுள்ள $P, Q$ என்னும் இரு துணிக்கைகள் முறையே $DE, CB$ மீது வைக்கப்பட்டு $D, C$ யில் பொருத்தப்பட்ட ஒப்பமான கப்பிகளுக்கு மேலாகச் செல்லும் ஒரு இலேசான நீட்டமுடியாத இழையின் முனைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளன. மேலும் $3m$ திணிவுள்ள துணிக்கை $R$ ஆனது $F$ இல் பொருத்தப்பட்ட ஒப்பமான கப்பியின் மேலாகச் செல்லும் ஒரு இலேசான நீட்டமுடியாத இழையினால் படத்தில் காட்டியவாறு ஆப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தொகுதியானது உருவில் காட்டப்பட்டவாறு $AF = s$ ஆகுமாறு இருக்க பிடிக்கப்பட்டு ஓய்விலிருந்து விடுவிக்கப்படுகின்றது. ஆப்பு மேசையின் விளிம்பு $F$ இனை அடையும்வரை $P$ துவாரத்தினுள் உள்ளது எனக் கொள்க. ஆப்பானது மேசையின் விளிம்பை அடையும்போது அதன் வேகம், அந்நேரத்தில் $P$ துவாரத்தினுள் பயணித்த தூரம் ஆகியவற்றைத் துணிவதற்கு போதிய சமன்பாடுகளைப் பெறுக.





$a_{W,E} = \leftarrow F$

$a_{P,W} = \nwarrow f$

$a_{Q,W} = \searrow f$

$a_{R,E} = \downarrow F$




(5)+(5)

$F = ma$ இனைப் பிரயோகிக்க

$(R) \downarrow \quad 3mg - T_1 = 3mF \quad (10)$

தொகுதிக்கு

$\leftarrow \quad T_1 = MF + m(F + f\cos\alpha) + 2m(F - f\cos\alpha) \quad (15)$

$P \nwarrow \quad T_2 - mg\sin\alpha = m(f + F\cos\alpha)$ (10)

$Q \searrow \quad 2mg\sin\alpha - T_2 - = 2m(f - F\cos\alpha)$ (10)

ஆப்பிற்கு $\leftarrow \quad v^2 = u^2 + 2as$

$v^2 = 2Fs$ (5)

$\leftarrow \quad v = u + at$ அல்லது $\leftarrow \quad s = ut + \frac{1}{2}at^2$


$v = Ft_1 \qquad s = \frac{1}{2}Ft_1^{\,2}$ (5)

$P$ யிற்கு ஆப்பு சார்பாக $\nwarrow \quad s = ut + \frac{1}{2}at^2$


$d = \frac{1}{2}ft_1^{\,2}$ (5)

70

(b) $O$ ஐ மையமாகவும் $a$ இனை ஆரையாகவும் உடைய ஒரு ஒப்பமான மெல்லிய குழாய் $AB$ யும் $O'$ ஐ மையமாகவும் $a$ இனை ஆரையாகவும் உடைய ஒரு ஒப்பமான மெல்லிய குழாய் $CD$ யும் படத்தில் காட்டப்பட்டவாறு ஓர் நிலைக்குத்துத் தளத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. $BC$ ஆனது $B, C$ யில் குழாய்களுக்கு தொடலியாக இருக்குமாறு உள்ள ஒரு கரடான தளமாகும். $A\hat{O}B = 5\pi/6$ எனவும் $C\hat{O}'D = \pi/3$ எனவும் தரப்பட்டுள்ளது. மேலும் $BC = \sqrt{3}\,a$ ஆகும். திணிவு $m$ ஐ உடைய ஒரு சிறிய ஒப்பமான மணி $P$ யானது $A$ யில் வைக்கப்பட்டு நிலைக்குத்தாக கீழ்நோக்கி $u$ எனும் கதி வழங்கப்படும் போது அது குழாயின் வழியே இயங்கத் தொடங்குகின்றது. $P$ ஆனது குழாய் $AB$ யில் உள்ளபோது $\overrightarrow{OP}$ ஆனது $\overrightarrow{OA}$ உடன் $\theta\left(0 \le \theta \le 5\pi/6\right)$ கோணம் அமைக்கும்போது அதன் கதி $v$ ஆனது $v^2 = u^2 + 2ag\sin\theta$ இனால் தரப்படுகின்றது எனவும் அதன் மீதுள்ள மறுதாக்கம் $R$ ஆனது $R = \frac{m}{a}\left(u^2 + 3ag\sin\theta\right)$ இனால் தரப்படுகின்றது எனவும் காட்டுக.




தொடரும் இயக்கத்தில் மணியானது குழாய் $AB$ யிலிருந்து $B$ யில் வெளியேறி பின் கரடான தளம் $BC$ மீது இயங்குகின்றது. துணிக்கை $BC$ வழியே பயணிக்கும் போது அதன் மீது பிரயோகிக்கப்படும் உராய்வு விசையின் பருமன் $\frac{mg}{2\sqrt{3}}$ எனத்தரப்பட்டுள்ளது. மணி $P$ யானது குழாய் $CD$ யினுள் $C$ யில் புகுந்து $D$ யினை அடைகின்றது எனின் $u^2 \ge 4ag$ எனக் காட்டுக. மேலும் மணி $P$ யானது $D$ யிலிருந்து வெளியேறி புவியீர்ப்பின்கீழ் இயங்கி தரையை கிடையுடன் $\pi/4$ சாய்வில் அடிக்கின்றது எனின் $u = 3\sqrt{ag}$ எனக் காட்டுக.






[பக். 10 ஐப் பார்க்க

சக்திக்காப்புத் தத்துவத்தின்படி

$$\frac{1}{2}mv^2 - mg\,a\sin\theta = \frac{1}{2}mu^2 + 0 \quad (10) \quad \Rightarrow \quad v^2 = u^2 + 2ag\sin\theta \quad (5)$$


$\nearrow F = ma$

$$R - mg\sin\theta = \frac{mv^2}{a} \quad (5)$$

$$R = mg\sin\theta + \frac{m}{a}\left(u^2 + 2ag\sin\theta\right)$$

$$= \frac{m}{a}\left(u^2 + 3ag\sin\theta\right) \quad (5)$$

$$\theta = \frac{5\pi}{6} \Rightarrow w_1^2 = u^2 + 2ag\sin\left(\frac{5\pi}{6}\right) = u^2 + ag \quad (5)$$





$BC$ வழியே $\nearrow F = ma$

$$-\frac{mg}{2\sqrt{3}} - mg\sin\left(\pi/3\right) = mf \quad (5)$$

$$f = -\frac{2\sqrt{3}\,g}{3} \quad (5)$$

$\nearrow v^2 = u^2 + 2as$

$$w_2^2 = (u^2 + ag) + 2\left(-\frac{2\sqrt{3}\,g}{3}\right)\sqrt{3}\,a = u^2 - 3ag \quad (5)$$




சக்திக்காப்புத் தத்துவத்தின்படி

$$\frac{1}{2}mw_2^2 + mg\,a\cos\left(\frac{\pi}{3}\right) = \frac{1}{2}mw_3^2 + mga \quad (10)$$

$$\Rightarrow w_3^2 = w_2^2 - ag$$

$$w_3^2 = u^2 - 4ag \quad (5)$$

$\therefore$ துணிக்கை $D$ இனை அடையுமெனின்

$$w_3^2 \geq 0$$

$$u^2 - 4ag \geq 0 \quad (5)$$


$$u^2 \geq 4ag$$

தரையிலிருந்து $D$ யின் உயரம் $= \left(a - a\sin\left(\frac{\pi}{6}\right)\right) + \sqrt{3}\,a\sin\left(\frac{\pi}{3}\right) + \left(a - a\cos\left(\frac{\pi}{3}\right)\right) = \frac{5a}{2}$

$\downarrow v^2 = u^2 + 2ag$

$$v_1^2 = 0 + 2g\left(\frac{5a}{2}\right) = 5ag \quad (5)$$

$$\tan\left(\frac{\pi}{4}\right) = \frac{v_1}{w_3} \Rightarrow 5ag = u^2 - 4ag \quad (5)$$




$$u^2 = 9ag$$


$$u = 3\sqrt{ag} \quad (5)$$

80



[பக். 11 ஐப் பார்க்க

**13.** ஒரே இயற்கை நீளம் $4a$ உம் $3mg, \lambda mg$ மீள்தன்மை மட்டும் உடைய $A, B$ எனும் இரு இழைகளின் ஒரு நுனி $2m$ திணிவுடைய ஒரு துணிக்கை $P$ யிற்கும் மற்றைய நுனி கிடையான சீலிங்கில் உள்ள ஒரு நிலைத்த புள்ளி $O$ விற்கும் உருவில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளன. துணிக்கை $O$ விற்கு கீழே $5a$ தூரத்தில் நாப்பத்தில் தொங்குகின்றது. இந்நிலையில் இழைகள் $A, B$ ஆகியவற்றில் உள்ள இழுவைகள் முறையே $T_1, T_2$ எனின், $T_1, T_2$ ஆகியவற்றுக்கான கோவைகளை தனித்தனியே எழுதி $\lambda = 5$ எனக் காட்டுக.




இப்போது $4m$ திணிவுடைய வேறோர் துணிக்கை $Q$ ஆனது $O$ இற்கு நிலைக்குத்தாக கீழே $3a/2$ தூரத்தில் இருந்து $P$ இனை நோக்கி $\sqrt{2ag}$ எனும் கதியுடன் எறியப்படுகின்றது. $Q$ ஆனது $P$ உடன் நேரடியாக மோதி இணைந்து ஒரு சேர்த்தித் துணிக்கை $R$ ஐ ஆக்குகின்றது. $R$ ஆனது இயங்கத் தொடங்கும் வேகம் $2\sqrt{ag}$ எனக் காட்டுக.


இழை தளர்வுறாமல் இருந்து பின்னர் நடைபெறும் இயக்கத்தில் சேர்த்தித் துணிக்கை $R$ இற்கு $O$ விலிருந்து உள்ள தூரம் $x$ ஆனது $\ddot{x} + \frac{g}{3a}(x - 7a) = 0$ எனும் சமன்பாட்டைத் திருப்தியாக்குகின்றது எனக் காட்டுக.

மேலும் $X = x - 7a$ என எழுதுவதன் மூலம் $\ddot{X} + \omega^2 X = 0$ எனக் காட்டுக. இங்கு $\omega = \sqrt{\frac{g}{3a}}$ ஆகும்.

மேற்குறித்த எளிய இசை இயக்கத்தின் மையத்தையும், $\dot{X}^2 = \omega^2(A^2 - X^2)$ எனும் சூத்திரத்தைப் பயன்படுத்தி வீச்சம் $A$ ஐயும் காண்க.

தொடரும் இயக்கத்தில் $R$ ஆனது $O$ இற்கு கீழே $10a$ தூரத்தில் உள்ள கிடைத்தரையை அடிக்கின்றது. $P, Q$ இணைந்த கணத்திலிருந்து $R$ தரையை அடிப்பதற்கான நேரம் $\sqrt{\frac{3a}{g}}\left(\frac{2\pi}{3} - \cos^{-1}\left(\frac{3}{4}\right)\right)$ எனக் காட்டுக.

$R$ ஆனது தரையை மோதும் கணத்தில் இழை $B$ ஆனது கணத்தாக்கு எதுவுமின்றி அறுகின்றது எனவும் தரைக்கும் $R$ இற்கும் இடையிலான மீளமைவுக்குணகம் $\sqrt{\frac{3}{7}}$ எனவும் தரப்படின் மோதுகையின் பின்னர் $R$ இன் கதி $\sqrt{ag}$ எனக் காட்டுக. தொடரும் இயக்கத்தில் $OR = y$ எனின் $y$ ஆனது $\ddot{y} + \frac{g}{8a}(y - 12a) = 0$ எனும் சமன்பாட்டைத் திருப்தி செய்யும் எனக்காட்டி இவ் எளிய இசை இயக்கத்தின் அலைவு மையத்தையும் வீச்சத்தையும் காண்க.




$$T_1 = \frac{3mg \times a}{4a} = \frac{3mg}{4} \quad (5)$$


$$T_2 = \frac{\lambda mg \times a}{4a} = \frac{\lambda mg}{4} \quad (5)$$

$P$ யின் சமனிலைக்கு

$$T_1 + T_2 = 2mg \quad (5)$$

$$\frac{3mg}{4} + \frac{\lambda mg}{4} = 2mg$$

$$\lambda = 5 \quad (5)$$




(Q) $\downarrow v^2 = u^2 + 2as$

$$v^2 = 2ag + 2 \times g \times \frac{7a}{2} \quad (5)$$

$$= 9ag \Rightarrow v = 3\sqrt{ag} \quad (5)$$




[பக். 12 ஐப் பார்க்க

$P, Q$ இற்கு $\downarrow I = \Delta mv$

$0 = 6mw - \left(4m \times 3\sqrt{ag} + 0\right)$ (5)

$w = 2\sqrt{ag}$ (5)




$R$ இற்கு $\uparrow F = ma$

$T_1 + T_2 - 6mg = -6m\ddot{x}$ (5)

$\frac{3mg}{4a}(x-4a) + \frac{5mg}{4a}(x-4a) - 6mg = -6m\ddot{x}$ (10)

$\ddot{x} + \frac{g}{3a}(x - 7a) = 0$ (5)

$X = x - 7a \quad \Rightarrow \dot{X} = \dot{x}, \ \ddot{X} = \ddot{x}$ (5)

$\ddot{X} + \frac{g}{3a}X = 0$

$\ddot{X} + \omega^2 X = 0$ இங்கு $\omega^2 = \frac{g}{3a}$ ஆகும். (5)

அலைவு மையம் $X = 0$ இனால் தரப்படும்

$\Rightarrow x = 7a$ (5)


$\dot{X}^2 = \omega^2\left(A^2 - X^2\right)$

$x = 5a$ இல் $\dot{x} = 2\sqrt{ag}$

$X = 5a - 7a = -2a$

$4ag = \frac{g}{3a}\left(A^2 - (-2a)^2\right)$ (5)

$A^2 = 16a^2 \Rightarrow A = 4a$ (5)





$\cos\theta_1 = \frac{1}{2} \qquad \cos\theta_2 = \frac{3}{4}$ (5)

$\beta = \pi - \cos^{-1}\left(\frac{1}{2}\right) - \cos^{-1}\left(\frac{3}{4}\right)$

$= \frac{2\pi}{3} - \cos^{-1}\left(\frac{3}{4}\right)$ (5)

$t = \frac{\beta}{\omega} = \sqrt{\frac{3a}{g}}\left(\frac{2\pi}{3} - \cos^{-1}\left(\frac{3}{4}\right)\right)$ (5)




துணிக்கை தரையை அடிக்கும்போது வேகம்


$x = 10a$ ஆக $X = -3a$

$\dot{X}^2 = \frac{g}{3a}(16a^2 - 9a^2)$ (5)

$\dot{X}^2 = \frac{7ag}{3} \quad \Rightarrow v_1 = \sqrt{\frac{7ag}{3}}$ (5)

மோதிய பின் $R$ இன் வேகம் $v_2 = ev_1$

$v_2 = \sqrt{\frac{3}{7}}\sqrt{\frac{7ag}{3}} = \sqrt{ag}$ (5)




(R) $\uparrow F = ma$

$T - 6mg = -6m\ddot{y}$ (5)

$\frac{3mg}{4a}(y - 4a) - 6mg = -6m\ddot{y}$ (5)

$\ddot{y} + \frac{g}{8a}(y - 12a) = 0$ (5)

$Y = y - 12a \quad \Rightarrow \dot{Y} = \dot{y}, \quad \ddot{Y} = \ddot{y}$

$\ddot{Y} + \omega_1^2 y = 0$

$\omega_1^2 = \frac{g}{8a}$ (5)

$Y = 0$ இல் அலைவு மையம் பெறப்படும்

$\Rightarrow y = 12a$ (5)

$\dot{Y}^2 = \omega^2\left(A_1^2 - Y^2\right)$

$y = 10a$ இல் $\dot{y}^2 = ag = \dot{Y}^2$

$Y = 10a - 12a = -2a$

$ag = \frac{g}{8a}\left(A_1^2 - 4a^2\right)$ (5)

$A_1^2 = 12a^2$

$A_1 = 2\sqrt{3}a$ (5)

150




[பக். 14 ஐப் பார்க்க

**14.** $(a)$ $OACB$ ஆனது $\overrightarrow{OA}=\mathbf{a}, \overrightarrow{OB}=\mathbf{b}$ ஆகுமாறுள்ள ஒரு இணைகரம் ஆகும். $D$ ஆனது $OA$ இன் நடுப்புள்ளியும் $E$ ஆனது $OB$ மீது $\overrightarrow{OE}=k\overrightarrow{OB}$ ஆகுமாறும் உள்ள புள்ளிகள் ஆகும். $\overrightarrow{OC}, \overrightarrow{DE}$ ஆகியவற்றை $\mathbf{a},\mathbf{b}$ ஆகியவற்றின் சார்பில் கண்டு $\overrightarrow{OC}.\overrightarrow{DE}=-\frac{1}{2}|\mathbf{a}|^2+\left(k-\frac{1}{2}\right)(\mathbf{a}.\mathbf{b})+k|\mathbf{b}|^2$ எனக் காட்டுக.

$A\hat{O}B=\frac{\pi}{3}$ எனவும் $k=\frac{1}{5}$ ஆகவும் உள்ள போது $\overrightarrow{OC}, \overrightarrow{DE}$ ஆகியன ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனின் $|\mathbf{b}|=2|\mathbf{a}|$ எனக் காட்டுக.

$OC, DE$ ஆகியன இடைவெட்டும் புள்ளி $F$ ஆகும். $\overrightarrow{OF}=\lambda\overrightarrow{OC}$ எனவும் $\overrightarrow{FE}=\mu\overrightarrow{DE}$ எனவும் கொள்க. முக்கோணி $OFE$ இல் காவிக்கூட்டலைப் பயன்படுத்துவதன் மூலம் $\left(\lambda-\frac{\mu}{2}\right)\mathbf{a}+\left(\lambda+\frac{\mu}{5}-\frac{1}{5}\right)\mathbf{b}=\mathbf{0}$ எனக் காட்டுக.

இதிலிருந்து $\lambda, \mu$ இன் பெறுமானங்களைக் கண்டு $F$ ஆனது $OC$ இனை பிரிக்கும் விகிதத்தைக் காண்க.




$\overrightarrow{OA}=\mathbf{a} \quad \overrightarrow{OB}=\mathbf{b}$

$\overrightarrow{OE}=k\overrightarrow{OB}=k\mathbf{b} \qquad 0<k<1$

$\overrightarrow{OC}=\overrightarrow{OA}+\overrightarrow{AC}=\mathbf{a}+\mathbf{b}$ (5)

$\overrightarrow{OD}=\frac{1}{2}\overrightarrow{OA}=\frac{1}{2}\mathbf{a}$

$\overrightarrow{DE}=\overrightarrow{DO}+\overrightarrow{OE}=-\frac{1}{2}\mathbf{a}+k\mathbf{b}$ (5)

$\overrightarrow{OC}.\overrightarrow{DE}=(\mathbf{a}+\mathbf{b}).\left(-\frac{1}{2}\mathbf{a}+k\mathbf{b}\right)$ (5)

$=-\frac{1}{2}\mathbf{a}.\mathbf{a}+k.\mathbf{a}.\mathbf{b}-\frac{1}{2}\mathbf{b}.\mathbf{a}.+k\mathbf{b}.\mathbf{b}$ (5)

$=-\frac{1}{2}|\mathbf{a}|^2+\left(k-\frac{1}{2}\right)(\mathbf{a}.\mathbf{b})+k|\mathbf{b}|^2$ (5)

$A\hat{O}B=\pi/3,\ k=1/5,\ \overrightarrow{OC}\perp\overrightarrow{DE} \Rightarrow \overrightarrow{OC}.\overrightarrow{DE}=0$

$-\frac{1}{2}|\mathbf{a}|^2+\left(\frac{1}{5}-\frac{1}{2}\right)|\mathbf{a}||\mathbf{b}|\cos\left(\pi/3\right)+\frac{1}{5}|\mathbf{b}|^2=0$ (5)

$4|\mathbf{b}|^2-3|\mathbf{a}||\mathbf{b}|-10|\mathbf{a}|^2=0$

$(|\mathbf{b}|-2|\mathbf{a}|)(4|\mathbf{b}|+5|\mathbf{a}|)=0$ (5)

$|\mathbf{b}|=2|\mathbf{a}| \qquad (\because\ 4|\mathbf{b}|+5|\mathbf{a}|\neq 0)$ (5)

$\overrightarrow{OF}=\lambda\overrightarrow{OC}=\lambda(\mathbf{a}+\mathbf{b})$

$\overrightarrow{FE}=\mu\overrightarrow{DE}=\mu\left(-\frac{1}{2}\mathbf{a}+\frac{1}{5}\mathbf{b}\right)$

$\overrightarrow{OE} = \overrightarrow{OF} + \overrightarrow{FE}$

$\frac{1}{5}\mathbf{b} = \lambda(\mathbf{a}+\mathbf{b}) + \mu\left(-\frac{1}{2}\mathbf{a} + \frac{1}{5}\mathbf{b}\right)$ (10)

$\left(\lambda - \frac{\mu}{2}\right)\mathbf{a} + \left(\lambda + \frac{\mu}{5} - \frac{1}{5}\right)\mathbf{b} = \mathbf{0}$

$\mathbf{a} \nparallel \mathbf{b},\ \mathbf{a}, \mathbf{b} \neq \mathbf{0}$


$\therefore\ \lambda - \frac{\mu}{2} = 0 \qquad \lambda + \frac{\mu}{2} - \frac{1}{5} = 0$

$\lambda = \frac{1}{7}$ (5) $\qquad \mu = \frac{2}{7}$ (5)

$\therefore\ OF : FC = 1:6$ (5)


65

(*b*) *ABCDEF* ஆனது ஒரு பக்க நீளம் $a$ ஆகவுள்ள ஓர் ஒழுங்கான அறுகோணி ஆகும். $2P, 4P, \alpha P, P, 3P, P$ என்னும் பருமனுடைய விசைகள் முறையே $\overrightarrow{AB}, \overrightarrow{BC}, \overrightarrow{CD}, \overrightarrow{ED}, \overrightarrow{EF}, \overrightarrow{AF}$ வழியே தாக்குகின்றன. இவ் விசைத்தொகுதியின் விளையுள் $\overrightarrow{AD}$ இற்கு சமாந்தரமாக தாக்குகின்றது எனின் $\alpha$ இனைக் கண்டு தொகுதியின் விளையுள் $R$ இன் பருமனைக் காண்க. இவ்விளையுள் விசையினது தாக்கக்கோடு நீட்டப்பட்ட $AB$ ஐ சந்திக்கும் புள்ளிக்கு $A$ இலிருந்து உள்ள தூரத்தைக் காண்க.
இவ் விசைத்தொகுதி $A$ இனூடாகத் தாக்கும் $R$ பருமனுடைய ஒரு தனி விசையுடன் பருமன் $G$ உடைய ஓர் இணைக்கு சமவலுவானது எனின் $G$ இன் பருமன், போக்கு ஆகியவற்றை காண்க.
$\overrightarrow{CA}, \overrightarrow{FB}$ வழியே முறையே $\beta P, \gamma P$ பருமனுள்ள விசைகளைச் சேர்க்கும்போது தொகுதியானது ஓர் இணைக்கு ஒடுங்குகின்றது எனின் $\beta, \gamma$ ஆகியவற்றையும் அவ் இணையின் பருமன், போக்கு என்பவற்றையும் காண்க.




$\rightarrow X = 2P + 4P\cos 60 - \alpha P\cos 60 + P - 3P\cos 60 - P\cos 60 = \left(3 - \frac{\alpha}{2}\right)P$ (10)

$\uparrow Y = 4P\sin 60 + \alpha P\sin 60 - 3P\sin 60^\circ + P\sin 60^\circ = \left(1 + \frac{\alpha}{2}\right)\sqrt{3}P$ (10)




விளையுள் $\overrightarrow{AD}$ இற்கு சமாந்தரம்

$\therefore \ \theta = 60^\circ$

$\tan 60^\circ = \dfrac{Y}{X}$ (5)

$\sqrt{3} = \dfrac{\left(1+\alpha/2\right)\sqrt{3}}{\left(3-\alpha/2\right)} \qquad \Rightarrow \alpha = 2$ (5)

$X = 2P \quad Y = 2\sqrt{3}P$

$R = \sqrt{(2P)^2 + \left(2\sqrt{3}P\right)^2} = 4P$ (5)

$A$ பற்றிய தொகுதியின் திருப்பம் = $A$ பற்றிய விளையுளின் திருப்பம்

$\overset{\curvearrowleft}{A}$ $4P \times a \sin 60^\circ + 2P\,2a\cos 30^\circ - P\ 2a\cos 30^\circ + 3P \times a\sin 60^\circ = R\ AM \cos 30^\circ$ (10)


$9aP \times \dfrac{\sqrt{3}}{2} = 4P \times AM \times \dfrac{\sqrt{3}}{2}$

$AM = \dfrac{9a}{4}$ (5)

$G = 4P \times AM \sin 60^\circ$

$= 4P \times \dfrac{9a}{4} \times \dfrac{\sqrt{3}}{2} = \dfrac{9\sqrt{3}}{2}\, aP$ (5)

$ABCD$ போக்கு (5)




$\uparrow - \gamma P \sin 30^\circ - \beta P \sin 30^\circ + 4P \sin 60^\circ = 0$ (5)

$\beta + \gamma = 4\sqrt{3}$ ----------①


$\rightarrow - \beta P \cos 30^\circ + \gamma P \cos 30^\circ + 4P \cos 60^\circ = 0$ (5)

$\sqrt{3}\left(\beta - \alpha\right) = 4$ ---------------②

①,② $\Rightarrow \quad \beta = \dfrac{8}{\sqrt{3}} \qquad \gamma = \dfrac{4}{\sqrt{3}}$ (5)

$\overset{\curvearrowleft}{A} \quad H = 4P \times \dfrac{9a}{4} \times \dfrac{\sqrt{3}}{2} - \dfrac{4}{\sqrt{3}} P \times a \sin 30^\circ$

$= \dfrac{23aP}{2\sqrt{3}}$ (5) $\quad ABCD$ போக்கு (5)





85




[பக். 17 ஐப் பார்க்க

**15.** (*a*) ஒவ்வொன்றும் நீளம் $2a$ ஐ உடைய $AB, BC, CD$ எனும் மூன்று சீரான கோல்கள் முனைகள் $B, C$ யில் ஒப்பமாக மூட்டப்பட்டுளன. $AB, BC, CD$ ஆகிய கோல்களின் நிறைகள் முறையே $kw, w, 3w$ ஆகும். முனை $A$ ஒரு கிடை நிலத்தின் மீதுள்ள ஒரு நிலைத்த புள்ளியில் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. தொகுதியானது $BC$ கிடையாகவும் $D\hat{A}B = A\hat{D}C = 60^\circ$ ஆகவும் கோல் $CD$ இன் முனைப் புள்ளி $D$ ஓர் கரடான கிடைத்தரையின்மீது இருக்குமாறும் உள்ளது. மேலும் படத்தில் காட்டியவாறு கோல்கள் இருக்கும் அதே நிலைக்குத்துத் தளத்தில் $B$ யில் கிடையுடன் $60^\circ$ சாய்வில் $\frac{w}{2\sqrt{3}}$ பருமனுடைய விசை பிரயோகிக்கப்படுகின்றது. கோல் $BC$ இனால் $CD$ மீது உஞற்றப்படும் மறுதாக்கத்தின் கிடை, நிலைக்குத்துக் கூறுகளைக் கண்டு $k = 2$ எனக் காட்டுக.




$D$ யில் தரையினால் கோல் $CD$ இற்கு வழங்கப்படும் செவ்வன் மறுதாக்கம் $\frac{7w}{2}$ எனக்காட்டி கோலுக்கும் தரைக்கும் இடையிலான உராய்வு விசையைக் காண்க. மேலும் கோல் $CD$ யிற்கும் தரைக்கும் இடையிலான உராய்வுக் குணகம் $\mu$ எனத்தரப்படின் தொகுதி சமனிலையில் இருக்கும்போது $\mu \geq \frac{4\sqrt{3}}{21}$ எனக்காட்டுக.




கோல் $BC$

$B \curvearrowright \quad w \times a - Y \times 2a = 0$ (5) $\quad \Rightarrow \quad Y = \frac{w}{2}$ (5)

கோல் $DC$

$D \curvearrowleft \quad 3wa \times \cos 60^\circ + Y \times 2a\cos 60^\circ - X \times 2a \sin 60^\circ = 0$ (10) $\quad \Rightarrow X = \frac{2w}{\sqrt{3}}$ (5)

கோல் $AB, \ BC$

$A \curvearrowright \quad kw \times a\cos 60^\circ + \frac{w}{2\sqrt{3}} \times 2a\cos 30^\circ + w \times 2a - X \times 2a \sin 60^\circ - Y \times 3a = 0$ (15)

$k = 2$ (5)

கோல் $CD$

$\rightarrow \ X - F = 0 \ \Rightarrow \ F = \frac{2w}{\sqrt{3}}$ (5) $\qquad \uparrow \ R - 3W - Y = 0 \ \Rightarrow \ R = \frac{7w}{2}$ (5)

சமனிலைக்கு $\frac{F}{R} \leq \mu$ (5) $\quad \Rightarrow \quad \mu \geq \frac{2w/\sqrt{3}}{7w/2}$ (5) $\quad \Rightarrow \quad \mu \geq \frac{4\sqrt{3}}{21}$

65





[பக். 18 ஐப் பார்க்க

$(b)$ உருவில் காட்டப்பட்டுள்ள சட்டப்படல் அவற்றின் முனைகளில் ஒப்பமாக மூட்டப்பட்ட $AB, BC, CD, DE, BE, BD$ எனும் ஆறு சம நீளமுள்ள இலேசான கோல்களைக் கொண்டுள்ளது. $3w, w$ பருமனுடைய விசைகள் முறையே $C, D$ யில் தாக்கும் அதேவேளை சட்டப்படல் $A$ யில் ஒரு நிலைத்த புள்ளியில் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டு $E$ யில் கிடையுடன் $30^\circ$ சாய்வில் தாக்கும் விசை $P$, $B$ யில் நிலைக்குத்தாக மேல்நோக்கி தாக்கும் விசை $Q$ என்பவற்றால் $AB, BC, DE$ ஆகிய கோல்கள் கிடையாக இருக்குமாறு நாப்பத்தில் வைக்கப்படுகின்றது. போவின் குறிப்பீட்டைப் பயன்படுத்தி $C, D, E, B$ ஆகிய மூட்டுகளுக்கு ஒரு தகைப்பு வரிப்படத்தை வரைக. **இதிலிருந்து**


(i) $P, Q$ இன் பெறுமானங்களைக் காண்க.

(ii) கோல்களில் உள்ள தகைப்புக்களை அவை இழுவைகளா உதைப்புக்களா எனக் குறிப்பிட்டுக் காண்க.




<u>தகைப்பு வரிப்படம்</u>




(30)

$P$ ஆனது $cd$ இனால் தப்படும் $\Rightarrow$ $P = 7w$ (5)

$Q$ ஆனது $ab$ இனால் தப்படும் $\Rightarrow$ $Q = \dfrac{w}{2}$ (5)




[பக். 19 ஐப் பார்க்க

| கோல் | இழுவை | உதைப்பு |
|---|---|---|
| $AB$ | $-$ | $bc = \dfrac{7\sqrt{3}w}{2}$ |
| $BC$ | $-$ | $af = \sqrt{3}w$ |
| $CD$ | $ef = 2\sqrt{3}w$ | $-$ |
| $DE$ | $dg = \dfrac{7w}{\sqrt{3}}$ | $-$ |
| $BD$ | $-$ | $fg = \dfrac{8w}{\sqrt{3}}$ |
| $BE$ | $cg = \dfrac{7w}{\sqrt{3}}$ | $-$ |


(30) + (15)

85

**16.** (i) உரு$-I$ இல் காட்டப்பட்டவாறு ஆரை $R$ ஐயும் பரப்படர்த்தி $\sigma$ ஐயும் உடைய சீரான பொள் அரைக்கோள ஓட்டினை அதன் வட்ட விளிம்பிற்கு சமாந்தரமானதும் மையம் $O$ இலிருந்து $H$ தூரத்தில் உள்ளதுமான ஒரு தளத்தினால் வெட்டுவதன் மூலம் அடித்துண்டு ஒன்று பெறப்படுகின்றது. தொகையிடலைப் பயன்படுத்தி இவ் அடித்துண்டின் திணிவு $2\pi RH\sigma$ எனவும் அதன் திணிவு மையம் $O$ இலிருந்து $\dfrac{H}{2}$ தூரத்தில் இருக்கும் எனவும் காட்டுக.




உரு$-I$




உரு$-II$

(ii) உயரம் $h$ ஐ உடைய ஒரு சீரான பொட் செவ்வட்ட கூம்பின் திணிவு மையம் அதன் அடியின் மையத்திலிருந்து தூரம் $\dfrac{1}{3}h$ இல் உள்ளதெனக் காட்டுக.

உரு$-II$ இல் காட்டப்பட்டவாறு $\sigma$ பரப்படர்த்தியும் $4a$ ஆரையும் உடைய சீரான பொள் அரைக்கோளத்திலிருந்து பெறப்பட்ட $3a$ உயரமான அடித்துண்டிற்கு $\sqrt{7}a$ ஆரையும் $\sigma$ பரப்படர்த்தியும் $O'$ இனை மையமாகவும் கொண்ட சீரான வட்ட தகடு ஒன்று விறைப்பாக பொருத்தப்பட்டு பானை ஒன்றின் அடிப்பகுதி பெறப்படுகின்றது. மேலும் மேல்வட்ட விளிம்பினதும் கீழ்வட்ட விளிம்பினதும் ஆரைகள் முறையே $a, 4a$ ஆகவும் உயரம் $4a$, சாயுயரம் $5a$ ஆகவும் பரப்படர்த்தி $\sigma$ ஆகவும் உள்ள பொட்கூம்பின் அடித்துண்டு, $a$ ஆரையும் $\dfrac{a}{2}$ உயரமும் $4\sigma$ பரப்படர்த்தியும் உடைய பொட் செவ்வட்ட உருளையின் வடிவமுள்ள சீரான மெல்லிய ஓடு ஆகியவற்றை உரு$-II$ இல் காட்டியவாறு அவற்றின் விளிம்புகள் வழியே விறைப்பாக பொருந்துவதன் மூலம் ஒரு பானை செய்யப்படுகின்றது.


$O'$ இலிருந்து பானையின் திணிவு மையத்திற்கான தூரம் $3a$ எனக் காட்டுக.

பானையின் மேல் விளிம்பில் உள்ள ஒரு புள்ளி $A$ யிலிருந்து பானை ஒரு நிலைக்குத்து இழையினால் சுயாதீனமாக தொங்கவிடப்படும்போது நாப்பத்தானத்தில் $O'$ இனூடான அதன் சமச்சீர் அச்சு கீழ்முக நிலைக்குத்துடன் ஆக்கும் கூர்ங்கோணம் $\tan^{-1}\left(\dfrac{2}{9}\right)$ எனக் காட்டுக.



[பக். 20 ஐப் பார்க்க

சமச்சீரின்படி புவியீர்ப்பு மையம் $y$ அச்சு மீது இருக்கும். (5)




$$m = \int_{\alpha}^{\pi/2} (2\pi R\sin\theta) R d\theta\sigma \quad (5)$$

$$= 2\pi R^2\sigma \int_{\alpha}^{\pi/2} \sin\theta \, d\theta$$

$$= 2\pi R^2\sigma [-\cos\theta]_{\alpha}^{\pi/2} \quad (5)$$

$$= 2\pi R^2\sigma\cos\alpha = 2\pi RH\sigma$$

$$\bar{y} = \frac{\int_{\alpha}^{\pi/2} (2\pi R\sin\theta) R\sigma \; R\cos\theta \, d\theta}{2\pi RH\sigma} \quad (5)$$

$$= \frac{R^2}{H} \int_{\alpha}^{\pi/2} \sin\theta \cos\theta \, d\theta$$


$$= \frac{R^2}{2H} \int_{\alpha}^{\pi/2} \sin 2\theta \, d\theta$$

$$= \frac{R^2}{2H} \frac{[-\cos 2\theta]_{\alpha}^{\pi/2}}{2} \quad (5)$$

$$= \frac{R^2}{4H} [1+\cos 2\alpha]$$

$$= \frac{R^2}{4H} \left[2\cos^2\alpha\right] = \frac{R^2}{4H} 2\left(\frac{H}{R}\right)^2 = \frac{H}{2} \quad (5)$$

சமச்சீரின்படி திணிவு மையம் $x -$ அச்சில் கிடக்கும் (5)











$$\bar{x} = \frac{\int_0^l x\cos\theta . \, 2\pi\sigma x\sin\theta dx \quad (5)}{\int_0^l 2\pi\sigma x \sin\theta \, dx \quad (5)}$$

$$= \frac{\cos\theta \int_0^l x^2 \, dx}{\int_0^l x \, dx} = \frac{\cos\theta \left(x^3/3\right)\Big|_0^l}{\left(\frac{x^2}{2}\right)\Big|_0^l} \quad (5) \; (5)$$

$$= \frac{2l\cos\theta}{3} = \frac{2h}{3}$$

அடியிலிருந்தான தூரம் $= h - \frac{2h}{3} = \frac{h}{3}$ (5)




| பொருள் | திணிவு | $O'$ இலிருந்து தூரம் |
|---|---|---|
|  | $7\pi a^2\sigma$ (5) | $0$ (5) |
|  | $2\times\pi\times 4a\times 3a\times\sigma$ <br> $=24\pi a^2\sigma$ (5) | $\frac{3a}{2}$ (5) |
|  | $\pi\times 4a\times\frac{20a}{3}\times\sigma$ <br> $=\frac{80}{3}\pi a^2\sigma$ (5) | $3a+\frac{16a}{9}=\frac{43a}{9}$ (5) |
|  | $\pi\times a\times\frac{5a}{3}\times\sigma$ <br> $=\frac{5}{3}\pi a^2\sigma$ (5) | $7a+\frac{4a}{9}=\frac{67a}{9}$ (5) |
|  | $2\pi\times a\times\frac{a}{2}\times 4\sigma$ <br> $=4\pi a^2\sigma$ (5) | $7a+\frac{a}{4}=\frac{29a}{4}$ (5) |
|  | $60\pi a^2\sigma$ (5) | $\bar{y}$ |



[பக். 22 ஐப் பார்க்க


சமச்சீரின்படி புவியீர்ப்பு மையம் $y$ அச்சு மீது இருக்கும். (5)

$$0+24\pi a^2\sigma\times\frac{3a}{2}+\frac{80}{3}\pi a^2\sigma\times\frac{43a}{9}-\frac{5}{3}\pi a^2\sigma\times\frac{67a}{9}+4\pi a^2\sigma\times\frac{29a}{4}=60\pi a^2\sigma\overline{y}$$ (15)

$$36a+\left[\frac{80\times 43-5\times 67}{27}\right]a+29a=60\overline{y}$$

$$36a+115a+29a=60\overline{y}$$

$$\overline{y}=3a$$ (5)




$$\tan\theta=\frac{a}{4a+a/2}=\frac{2}{9}$$ (10)

$$\theta=\tan^{-1}\left(\frac{2}{9}\right)$$

150

**17. ($a$)** விருந்து நிகழ்வு ஒன்றிற்கு வரும் விருந்தினர்களுக்கு *Coke*, *Pepsi* எனும் இருவகையான குளிர்பானங்களில் ஒன்று சிறிய ஒரு கேளிக்கை விளையாட்டின் ஊடாகத் தெரிவுசெய்யப்படுகின்றது. ஜோன் என்பவர் விருந்துக்குச் செல்லும்போது முதலில் ஒரு கோடாத சதுரமுகித் தாயக்கட்டையை எறியுமாறு அறிவுறுத்தப்படுகின்றார். தாயக்கட்டையில் 1 விழுந்தால் குளிர்சாதனப்பெட்டி $A$ யிலிருந்தும் 2 அல்லது 4 விழுந்தால் குளிர்சாதனப்பெட்டி $B$ யில் இருந்தும் 3 அல்லது 5 அல்லது 6 விழுந்தால் குளிர்சாதனப் பெட்டி $C$ யில் இருந்தும் ஓர் குளிர்பானப் போத்தலை எழுமாற்றாகத் தெரிய வேண்டும். ஜோன் சென்றவேளை குளிர்சாதனப் பெட்டிகளில் உள்ள குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கைகள் பின்வருமாறு உள்ளன.

$A$ : 6 – *Coke*, 4 – *Pepsi*  $B$ : 3 – *Coke*, 7 – *Pepsi*  $C$ : 2 – *Coke*, 3 – *Pepsi*

ஜோன் விதிமுறைகளுக்கு அமைய தனக்கான குளிர்பானப் போத்தலைத் தெரிவுசெய்கின்றார். ஜோன் குளிர்சாதனப்பெட்டி $A, B, C$ ஆகியவற்றைத் தெரிவதற்கான நிகழ்தகவுகளைத் தனித்தனியே காண்க.

ஜோன் *Coke* மீது அதிக விருப்பமுடையவர் எனின் அவர் விரும்பும் குளிர்பானப் போத்தலைப் பெறுவதற்கான நிகழ்தகவை மொத்த நிகழ்தகவுத் தேற்றத்தைப் பயன்படுத்தி அல்லது வேறுவிதமாகக் காண்க.
ஜோன் தனக்கு விருப்பமான குளிர்பானப் போத்தலைப் பெற்றுக்கொண்டார் எனின் அது குளிர்சாதனப் பெட்டி $A$ யிலிருந்து பெறப்பட்டிருப்பதற்கான நிகழ்தகவு 0.25 எனக்காட்டுக.

**இதிலிருந்து** ஜோன் விரும்பிய குளிர்பானத்தைப் பெற்றுக்கொண்டார் எனின் அது குளிர்சாதனப்பெட்டி $B$ அல்லது $C$ யிலிருந்து பெறப்பட்டிருப்பதற்கான நிகழ்தகவை உய்த்தறிக.

$A$ - குளிர்சாதனப்பெட்டி $A$ தெரிவுசெய்யப்படல்

$B$ - குளிர்சாதனப்பெட்டி $B$ தெரிவுசெய்யப்படல்

$C$ - குளிர்சாதனப்பெட்டி $C$ தெரிவுசெய்யப்படல்

$Co$ – ஜோன் *Coke* இனைப் பெற்றுக்கொள்ளல்

$Pe$ – ஜோன் *Pepsi* இனைப் பெற்றுக்கொள்ளல்

$P(A)=1/6$ (5)  $P(B)=2/6=1/3$ (5)  $P(C)=3/6=1/2$ (5)



[பக். 23 ஐப் பார்க்க

$P(Co \mid A) = 6/10 = 3/5$

$P(Co \mid B) = 3/10$

$P(Co \mid C) = 2/5$

மொத்த நிகழ்தகவு தேற்றம்:

$P(Co) = P(Co \mid A)\ P(A) + P(Co \mid B)P(B) + P(Co \mid C)P(C)$ (5)

$= 3/5 \times 1/6 + 3/10 \times 1/3 + 2/5 \times 1/2$ (15)

$= \frac{1}{10} + \frac{1}{10} + \frac{2}{10} = \frac{4}{10} = 0.4$ (5)

பேயிசின் தேற்றப்படி

$P(A \mid Co) = \frac{P(Co \mid A)\ P(A)}{P(Co)}$ (5)

$= \frac{3/5 \times 1/6}{4/10} = \frac{1}{4} = 0.25$ (5)

$P(B$ அல்லது $C \mid Co)$

$= P(B \cup C \mid Co)$

$= P(A' \mid Co)$ $(\because P(A$யிலிருந்து பெறப்படவில்லை$))$ (5)

$= 1 - P(A \mid Co)\ = 1 - 0.25\ = 0.75$ (5)

60

(b) $X = \{x_1, x_2, x_3, .........x_n\}$ என்பது $n$ எண்ணிக்கையான எண்கள் ஆகும். $Y(\subset X)$ ஆனது $X$ இலிருக்கும் $m$ எண்ணிக்கையான எண்களைக் கொண்ட தொடை ஆகும். $Z$ ஆனது தொடை $X$ இலிருந்து தொடை $Y$ இல் உள்ள எண்களை நீக்குவதன் மூலம் பெறப்படுகின்றது. $Y = \{y_1, y_2, ........y_m\}$ எனவும் $Z = \{z_1, z_2, ........z_{n-m}\}$ எனவும் கொள்க. தொடை $X$ இன் இடை, நியம விலகல் முறையே $\mu_x, \sigma_x$ எனவும் தொடை $Y$ இன் இடை, நியம விலகல் முறையே $\mu_y, \sigma_y$ எனவும் கொள்க.

தொடை $Z$ இல் உள்ள $n-m$ எண்ணிக்கையான எண்களின் இடை $\mu_z = \frac{n\mu_x - m\mu_y}{n-m}$ எனக்காட்டுக.

மேலும் $d_1 = \mu_z - \mu_x$ எனின் $\sum_{i=1}^{n}(x_i - \mu_z)^2 = n(\sigma_x^2 + d_1^2)$ எனக் காட்டுக.

மேலும் $d_2 = \mu_z - \mu_y$ எனின் $\sum_{i=1}^{m}(y_i - \mu_z)^2$ இற்கு இயல்பொத்த கோவை ஒன்றை எழுதுக.

**இதிலிருந்து** $\sigma_z^2 = \frac{n(\sigma_x^2 + d_1^2) - m(\sigma_y^2 + d_2^2)}{n-m}$ என உய்த்தறிக.

அணு உலை ஒன்றின் வெளி வெப்பநிலை 120 நாட்களுக்கு தொடர்ச்சியாக அளக்கப்பட்டு அதன் இடை, நியம விலகல் என்பன முறையே $42^oC, 4^oC$ எனக் கணிக்கப்பட்டது. உபகரணங்களை சரிபார்க்க வந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெப்பமானி பழுதடைந்திருப்பதை அவதானித்து இறுதி 20 நாட்களாகப் பெறப்பட்ட அளவீடு பிழையானது எனத் தெரிவிக்கின்றார். இறுதி 20 நாட்கள் பெறப்பட்ட பிழையான வாசிப்புகளின் இடை, நியம விலகல் முறையே $37^oC, 2^oC$ எனத் தரப்படின் முதல் 100 நாட்களில் பெறப்பட்ட சரியான வாசிப்புகளின் இடை, நியம விலகல் ஆகியவற்றைக் காண்க.



[பக். 24 ஐப் பார்க்க

$$\frac{\sum_{i=1}^{n} x_i}{n} = \mu_x \quad (5) \qquad \frac{\sum_{i=1}^{m} y_i}{m} = \mu_y \quad (5)$$

$$\sum_{i=1}^{n-m} z_i = \sum_{i=1}^{n} x_i - \sum_{i=1}^{m} y_i = n\mu_x - m\mu_y \quad (10)$$

$$\mu_z = \frac{\sum_{i=1}^{n-m} z_i}{n-m} = \frac{n\mu_x - m\mu_y}{n-m}$$

$$\sigma_x{}^2 = \sum_{i=1}^{n} \frac{(x_i - \mu_x)^2}{n} \quad (5)$$

$$\sum_{i=1}^{n} (x_i - \mu_z)^2 = \sum_{i=1}^{n} \left((x_i - \mu_x) + (\mu_x - \mu_z)\right)^2 \quad (5)$$

$$= \sum_{i=1}^{n} \left((x_i - \mu_x) + d_1\right)^2$$

$$= \sum_{i=1}^{n} (x - \mu_x)^2 + 2d_1(x_i - \mu_x) + d_1{}^2 \quad (5)$$

$$= n\sigma_x{}^2 + 2d_1\left(\sum_{i=1}^{n} x_i - n\mu_x\right) + nd_1{}^2 \quad (5)$$

$$= n\sigma_x{}^2 + 2d_1(n\mu_x - n\mu_x) + nd_1{}^2$$

$$= n\left(\sigma_x{}^2 + d_1{}^2\right) \quad (5)$$

இதேபோல் $\sum_{i=1}^{m} (y_i - \mu_z)^2 = m(\sigma_y{}^2 + d_2{}^2)$ (5)

$$\sum_{i=1}^{n-m} (z_i - \mu_z)^2 = \sum_{i=1}^{n} (x_i - \mu_z)^2 - \sum_{i=1}^{m} (y_i - \mu_z{}^2) \quad (5)$$

$$= n\left(\sigma_x{}^2 + d_1{}^2\right) - m\left(\sigma_y{}^2 + d_2{}^2\right) \quad (5)$$

$$\therefore \ \sigma_1{}^2 = \sum_{i=1}^{n-m} \frac{(z_i - \mu_z)^2}{n-m} \quad (5)$$

$$= \frac{n\left(\sigma_x{}^2 + d_1{}^2\right) - m\left(\sigma_y{}^2 + d_2{}^2\right)}{n-m} \quad (5)$$

$X - 120$ நாள் தரவுகள் $\qquad$ $Y - 20$ நாள் பிழையான தரவுகள்

$Z - 100$ நாள் சரியான தரவுகள்

$\mu_x = 42^\circ C, \quad \sigma_x = 4^\circ C \qquad \mu_y = 37^\circ C, \quad \sigma_y = 2^\circ C$

$$\mu_z = \frac{120 \times 42 - 20 \times 37}{100} = 43^\circ C \quad (10)$$

$d_1 = 1^\circ C \qquad d_2 = 6^\circ C$

$$\sigma_z{}^2 = \frac{120(4^2 + 1^2) - 20(2^2 + 6^2)}{100} = 12.4 \quad (10) \quad \Rightarrow \sigma_z = \sqrt{12.4} = 3.52^\circ C$$

90

***